# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகை

## *2010 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 01 ஆம் திகதிய பகுதி II இற்குக் குறைநிரப்பி*

*(2010.10.04 ஆம் திகதியன்று வெளியிடப்பட்டது)*

# உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் (திருத்தம்)

**உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தைத் திருத்துவதற் கானதொரு சட்டமூலம்**

உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சர் அவர்களால் பிரசுரிக்கப்படுமாறு பணிக்கப்பட்டது

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 48.00** **தபாற் செலவு : ரூபா 15.00**

ச.வ.–ஓ. 54/2007

## உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

சுருக்கப் பெயர்.

**1.** இச்சட்டம், 2010ஆம் ஆண்டின்            ஆம் இலக்க, உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் (திருத்தச்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம்.

**2**. (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) 2004ஆம் ஆண்டின் 14ஆம் இலக்கச் சட்டத்தினால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் கட்டளைச்சட்டத்தின் 3ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பாகம் உட்புகுத்தப்படுகின்றது என்பதுடன் அது அதன் பாகம் 1 ஆகப் பயனுறுதலும் வேண்டும்.

### "பாகம் I

### தேசிய எல்லை நிர்ணயக் குழுவொன்றைத் தாபித்தல்

தேசிய எல்லை நிர்ணயக் குழுவொன்றைத் தாபித்தல்.

3(அ) (1) அமைச்சர் இப்பிரிவு நடைமுறைக்கு வருவதன்மீது வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளையின்மூலம் தேசிய எல்லை நிர்ணயக் குழுவொன்றைத் தாபித்தல் வேண்டும். (இது இப்பாகத்தில் "தேசிய குழு" எனக் குறிப்பீடு செய்யப்படும்). இக்குழு அமைச்சரால் நியமிக்கப்பட வேண்டிய ஐந்து ஆட்களைக் கொண்டிருத்தல் வேண்டும். இவர்களுள் ஒருவர் தேசிய குழுவின் தவிசாளராக இருப்பதற்கென அவரால் பெயர் குறித்து நிர்ணயிக்கப்படுதல் வேண்டும்.

(2) அவர்களின் பதவிக்காலத்தின்போது தேசிய குழுவின் உறுப்பாண்மையில் ஏதேனும் வெற்றிடம் ஏற்படும்பட்சத்தில் அத்தகைய வெற்றிடத்தை நிரப்புவதற்கு அமைச்சர் வேறோர் ஆளை நியமித்தல் வேண்டும்.

2-PL 005213-420 (2010/09)

(3) தேசிய குழுவின் ஏதேனும் கூட்டத்திற்கான கூட்டநடப்பெண் மூன்று உறுப்பினர்களாதல் வேண்டும் என்பதுடன் அதன் தவிசாளர் அத்தகைய குழுவின் எல்லாக் கூட்டங்களுக்கும் தலைமை தாங்குதல் வேண்டும். தேசிய குழுவின் ஏதேனும் கூட்டத்தில் தவிசாளர் சமுகமாயில்லாதவிடத்து கூட்டத்தில் சமுகமாயிருக்கும் உறுப்பினர்கள் அத்தகைய கூட்டத்திற்குத் தலைமை தாங்குவதற்கு அவர்களிடையேயிருந்து உறுப்பினர் ஒருவரைப் பெயர்குறித்து நியமித்தல் வேண்டும்.

(4) இப்பிரிவின் (3)ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய தேசிய குழு அதன் கூட்டங்களை நடாத்துதல் மற்றும் அத்தகைய கூட்டங்களில் அலுவல்களை நிறைவேற்றுதல் தொடர்பிலான நடவடிக்கை முறையை ஒழுங்குபடுத்தலாம்.

தேசிய குழுவின் பணிப்பாணையும் சமர்ப்பிக்கப்பட வேண்டிய அறிக்கையும்.

3 (ஆ). (1) தேசிய குழுவின் பணிப்பாணை யாவது, (3) ஆம் உட்பிரிவில் தரப்பட்டுள்ள தேவைப்பாடுகளைக் கருத்திற்கொண்டு ஒவ்வொரு உள்ளூர் அதிகாரசபையின் இடப்பரப்பை வட்டாரங்களாகப் பிரிப்பதற்காக அமைச்சருக்கு விதப்புரை செய்தலும் ஒவ்வொரு வட்டாரத்தினதும் எல்லைகளைத் தீர்மானித்தலும் அத்தகைய வட்டாரம் ஒவ்வொன்றினதும் எல்லைகளை நிர்ணயிப்பதும் அத்தகைய வட்டாரம் ஒவ்வொன்றுக்கும் பெயர் ஒன்றையும் இலக்கம் ஒன்றையும் குறித்தொதுக்குவதும் ஆதல் வேண்டும்.

(2) தேசிய குழு உள்ளூர் அதிகாரசபை இடப்பரப்பொன்றை வட்டாரங்களாகப் பிரிப்பதற்கான விதப்புரையைச் செய்கையில் பின்வருவனவற்றைக் கருத்தில் கொள்ளுதல் வேண்டும் :-

(அ) சம்பந்தப்பட்ட உள்ளூரதிகார சபையின் இன ரீதியிலான அமைப்பின் விகிதா

சாரத்தைக் கருத்திற்கொண்டு உள்ளூர் அதிகாரசபை இடப்பரப்பில் இனப் பிரிவு ஒவ்வொன்றுக்கும் சமமான விகிதாசரத்தை உறுதி செய்யும் அவசியம் ;

(ஆ) உள்ளூர் அதிகாரசபையின் புவியியல் இடப்பரப்பும் அதன் இயற்பியல் அம்சங்களும் ;

(இ) உள்ளூர் அதிகாரசபை இடப்பரப்பின் சனத்தொகையும் அத்தகைய சனத் தொகையின் செறிவும் ; அத்துடன்

(ஈ) உள்ளூர் அதிகாரசபையின் பொருளாதார அபிவிருத்தியின் மட்டம்.

(3) இரண்டாம் உட்பிரிவில் குறித்துரைக்கப் பட்ட தேவைப்பாடுகளைக் கருத்திற் கொண்டு ஒன்று மேற்பட்ட வேட்பாளரைத் தேர்ந்தனுப்ப உரித்துடைய வட்டாரமொன்றை உருவாக்கு வது தோதானதென தேசியகுழு கருதுமிடத்து குழு ஏதேனும் உள்ளூர் அதிகாரசபை விடயத்திற்கேற்ப பல உறுப்பினர் வட்டாரமொன்று அல்லது வட்டாரங்கள் உருவாக்கப்படுவதை விதப்புரை செய்தல் வேண்டும்.

(4) தேசிய குழுவின் நடவடிக்கைகள் குறித் துரைக்கப்பட வேண்டிய அத்தகைய முறையில் நடாத்தப்படுதல் வேண்டும்.

(5) பிரிவு 3அ என்பதன்கீழ் தாபிக்கப்பட்ட தேசிய குழுவொன்று அமைச்சரால் தீர்மானிக்கப் படவேண்டியவாறான அத்தகைய திகதியளவில் அதன் பணிப்பாணையை நிறைவேற்றுதலும் அத்த கைய பணிப்பாணை பூர்த்தியடைவதன்மீது விதப்புரைகளைப் பற்றிய அறிக்கையொன்றை அமைச்சருக்குச் சமர்ப்பித்தலும் வேண்டும்.

**உள்ளூர் அதிகாரசபை ஒவ்வொன்றுக்கும் உருவாக்கப்பட்ட வட்டாரம் ஒவ்வொன்றினதும் எல்லைகள், பெயர்கள் அத்துடன் இலக்கங்கள் பற்றிய அறிவிப்பு வெளியிடப்படுதல்.**

3 (இ). தேசிய குழுவொன்றின் அறிக்கை கிடைக்கப்பெற்றதன்மீது அமைச்சரானவர் வர்த்தமானியில் வெளியிடப்படும் அறிவிப்பொன்றின் மூலம் அந்தந்த உள்ளூர் அதிகாரசபை ஒவ்வொன்று தொடர்பிலும் தேசிய குழுவால் செய்யப்பட்ட விதப்புரைகளின்மீது அவ்வாறு உருவாக்கப்பட்ட வட்டாரங்களின் எண்ணிக்கையையும் வட்டாரம் ஒவ்வொன்றுக்கும் குறித்தொதுக்கப்பட்ட எல்லைகளையும் பெயர்களையும் இலக்கங்களையும் வெளியிடுதல் வேண்டும். பல்லுறுப்பினர் வட்டாரங்கள் உருவாக்கப்படுதலை விதப்புரை செய்துள்ளவிடத்து அத்தகைய வட்டாரம் ஒவ்வொன்றினதும் பல்லுறுப்பினர் பெயரையும் இலக்கத்தையும், சம்பந்தப்பட்ட உள்ளூர் அதிகாரசபையின் பெயரையும் அத்துடன் அத்தகைய பல்லுறுப்பினர் வட்டாரம் ஒவ்வொன்றும் தொடர்பில் தெரிவு செய்யப்படவுள்ள வேட்பாளர்களின் எண்ணிக்கையையும் குறித்துரைத்தல் வேண்டும்.

**அமைச்சர் ஏதேனும் வட்டாரத்தின் எல்லைகளை மாற்றுதல்.**

3 (ஈ). (1) அமைச்சரானவர், ஏதேனும் உள்ளூர் அதிகாரசபையின் வரையறைகளுக்கு ஏதேனும் மாற்றம் செய்யப்பட்டிருக்கின்றவிடத்து 3இ என்னும் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட அறிவிப்பில் வெளியிடப்பட்டவாறு அவ்வுள்ளூர் அதிகாரசபையின் வட்டாரங்களின் எல்லைகளுக்கு மாற்றம் ஒன்றை செய்விக்கலாம். மேலும் அம்மாற்றங்கள், அமைச்சரால் நியமிக்கப்படும் ஐவரைக் கொண்ட குழுவொன்றின் விதப்புரையின்மீது செய்யப்படுதல் வேண்டும். அத்துடன் 3ஆ என்னும் பிரிவில் குறித்துரைக்கப்பட்ட தேவைப்பாடுகள் செய்யப்படும் ஏதேனும் அத்தகைய மாற்றங்களுக்கும் அவை தொடர்பிலும் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் அமைச்சரால் எந்த வட்டாரத்தின் எல்லைகள் மாற்றஞ்செய்யப்பட்டனவோ அந்த வட்டாரமொவ்வொன்றினதும் புதிய எல்லைகள் வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டுமென்பதுடன் அத்தகைய மாற்றங்கள் செய்யப்பட்டதன் உடன்பின்னர் அத்தகைய

உள்ளூர் அதிகாரசபையில், இக்கட்டளைச் சட்டத்தின்கீழ் நடாத்தப்படும் ஒரு தேர்தல் தொடர்பில் அது பயனுறுதலும் வேண்டும்.

*மாவட்ட மட்டத்தில் மாவட்ட எல்லை நிர்ணயக் குழுக்களைத் தாபித்தல்.*

3 (உ) (1) தேசிய குழுவொன்று அதன் பணிப்பாணையை நிறைவேற்றுகையில் அதற்குத் துணைபுரியும் நோக்கத்திற்காக அமைச்சர் மாவட்ட மட்டத்தில் ஒவ்வொன்றுக்கும் எல்லை நிர்ணயக் குழுவொன்றை நியமிக்கலாம். இது இதனகத்துப்பின்னர் ஒரு “மாவட்டக் குழு” எனக் குறிப்பீடு செய்யப்படும் என்பதுடன் அது அத்தகைய மாவட்டக் குழுவின் தவிசாளராக இருக்க வேண்டிய இயைபான மாவட்டத்தின் மாவட்டச் செயலாளரையும் அமைச்சரால் நியமிக்கப்பட வேண்டிய பின்வரும் உறுப்பினர்களையும் கொண்டிருத்தலும் வேண்டும்.

(அ) தேர்தல்கள் திணைக்களத்தின் பிரதிநிதி ஒருவர் ;

(ஆ) அந்த மாவட்டம் எந்த மாகாண சபைக்குள் அமைந்துள்ளதோ அந்த மாகாணசபையின் மாகாண உள்ளூராட்சி அமைச்சின் பிரதிநிதி ஒருவர்;

(இ) நில அளவையாளர் தலைமையதிபதித் திணைக்களத்தின் பிரதிநிதி ஒருவர்;

(ஈ) தொகை மதிப்பு, புள்ளிவிவரத் திணைக்களத்தின் பிரதிநிதி ஒருவர்; அத்துடன்

(உ) அமைச்சரால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட பகிரங்க அலுவலர் ஒருவர்.

(2) மாவட்டச் சபையொன்று தேசிய குழுவொன்றால் அதற்குக் குறித்தளிக்கப்படக்கூடியவாறான அத்தகைய பணிகளை நிறைவேற்றுதல் வேண்டும் என்பதுடன் அத்தகைய தேசிய குழுவின் பணிப்பின்கீழும் மேற்பார்வையின்கீழும் செயலாற்றுதலும் வேண்டும்.

(3) பிரிவு 3அ என்பதன் (3)ஆம் (4)ஆம் உட்பிரிவுகளின் ஏற்பாடுகள் ஏதேனும் மாவட்டக் குழுவின் கூட்டங்கள் நடத்தப்படுவதற்கும் அது தொடர்பிலும் ஏற்ற மாற்றங்களுடன் ஏற்புடையன வாதல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் பாகம் I ஆனது பாகம் Iஅ என மீளவிலக்கமிடப் படுதல்.

**3**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 3ஆம் பிரிவை உடனடுத்துக் காணப்படும் "பாகம் I" என்னும் தலைப்பு இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாக, "பாகம் Iஅ" என்பது இடப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 4ஆம் பிரிவைத் திருத்துதல்.

**4**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 4ஆம் பிரிவு, அப்பிரிவின் (1)ஆம் உட்பிரிவை நீக்கஞ்செய்து அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:-

"(1) ஆணையாளர் இலங்கையிலுள்ள ஒவ்வொரு மாவட்டத்துக்காகவும், மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவல ராகவிருப்பதற்கு அல்லது செயலாற்றுவதற்குத் தகுதியான வரும் தகுந்தவருமான ஆளொருவரையும், விடயத்துக் கேற்ப, ஒரு மாவட்டத்திலுள்ள தேர்தற் பிரதேசங்களுள் ஒவ்வொன்றுக்காகவும் அல்லது குறிப்பிட்டவொரு தேர்தற் பிரதேசத்துக்காகவும் தெரிவத்தாட்சி அலுவலராகவிருப்ப தற்கு அல்லது செயலாற்றுவதற்கு வேறோராளையும், அம் மாவட்டத்துக்காக உதவித் தெரிவத்தாட்சி அலுவலர் களாக இருப்பதற்கு அல்லது செயலாற்றுவதற்கு அவசிய மாகக் கூடியவாறான அத்தகைய எண்ணிக்கையினரான வேறு ஆட்களையும் பெயர்கொண்டு அல்லது பதவி கொண்டு நியமிக்கலாம்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 5ஆம் பிரிவைத் திருத்துதல்.

**5**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 5ஆம் பிரிவு, அப்பிரிவின் (2)ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது:-

"(2) ஆணையாளரின் பொதுவான மேற்பார்வைக்கும் கட்டுப்பாட்டுக்கும் அமைய, ஒவ்வோர் உதவித் தெரிவத் தாட்சி அலுவலரும் உதவித் தேர்தல்கள் அலுவலரும், தேர்தல் அலுவலரொருவருக்கு இக்கட்டளைச்சட்டத்தி

னால் அளிக்கப்பட்ட அல்லது அவர் மீது சுமத்தப்பட்ட தத்துவங்களை அல்லது கடமைகளைப் பிரயோகிக்கலாம் அல்லது புரியலாம்.".

**6**. ஆயிரத்துத் தொளாயிரத்து எழுபத்தேழாம் ஆண்டின் 24ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 7ஆம் பிரிவு, அப்பிரிவின் (1)ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில், "ஏதேனும் தேர்தற் பிரதேசத்தில் சாதாரணமாக வதிந்துள்ள" என்னும் சொற்களுக்குப் பதிலாக "ஏதேனும் வட்டாரத்தில் சாதாரணமாக வதிந்துள்ள" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் மேலும் திருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 7ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**7**. 1990ஆம் ஆண்டின் 25ஆம் இலக்க, சட்டத்தினால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 9ஆம் பிரிவானது அப்பிரிவின் (1)ஆம் உட்பிரிவில் இத்தால் பின்வருமாறு மேலும் திருத்தப்படுகின்றது:-

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 9ஆம் பிரிவைத் திருத்துதல்.*

(1) அவ்வுட்பிரிவின் (ஈ) என்னும் பந்தியில் :-

(i) அப்பந்தியின் (V) (அ) என்னும் உட்பந்தியில் 1970, நவம்பர் 18ஆம் தேதிக்கு முன்னர் உருவாக்கப்பட்ட பதவியின்கீழ் 1970, நவம்பர் 18ஆந் தேதியன்று ஆண்டொன்றுக்கு 6,720 ரூபாவிற்கு குறையாத ஆரம்ப சம்பள அளவுத்திட்டம் என்னும் சொற்களுக்குப் பதிலாக "2007, யூன் 1ஆந் தேதிக்கு முன்னர் உருவாக்கப்பட்ட பதவியின்கீழ் 2006, சனவரி 1ஆந் தேதியன்று ஆண்டொன்றுக்கு 2,27,280 ரூபாவிற்குக் குறையாத ஆரம்ப சம்பள அளவுத்திட்டம் என்னும் சொற்களை இடுவதன் மூலமும்"; அத்துடன்

(ii) அப்பந்தியின் (V) (ஆ) என்னும் உட்பந்தியில் 1970, நவம்பர் 18ஆந் தேதிக்கு பின்னர் உருவாக்கப்பட்ட பதவியின்கீழ் என்னும் சொற்களுக்குப் பதிலாக "2007, யூன் 01ஆந் தேதிக்குப் பின்னர் உருவாக்கப்பட்ட பதவியின் கீழ்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்,";

(iii) அப்பந்தியின் (vi) (அ) என்னும் உட்பந்தியில் "1970, நவம்பர் 18ஆந் தேதிக்கு முன்னர் உருவாக்கப்பட்ட பதவியின்கீழ் 1970, நவம்பர் 18ஆந் தேதியன்று ஆண்டொன்றுக்கு 7200 ரூபாவிற்கு குறையாத ஆரம்ப சம்பள அளவுத்திட்டம்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "2009, சனவரி 1 ஆந் தேதிக்கு முன்னர் உருவாக்கப்பட்ட பதவியின் கீழ் 2009, சனவரி 01ஆந் தேதியன்று 2,46,300 ரூபாவிற்கு குறையாத ஆரம்ப சம்பள அளவுத்திட்டம்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்";

(iv) அப்பந்தியின் (vi) (ஆ) என்னும் உட்பந்தியில் "1970, நவம்பர் 18ஆந் தேதிக்கு பின்னர் உருவாக்கப்பட்ட பதவியின்கீழ்" என்னும் சொற்களுக்குப் பதிலாக 2009, சனவரி 01ஆந் தேதிக்குப் பின்னர் உருவாக்கப்பட்ட சம்பள பதவியின் கீழ்" என்னும் சொற்களை இடுவதன்மூலம்,";

(2) அவ் உட்பிரின் (i) ஆம் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பந்தியினை இடுவதன் மூலமும்:-

"(i) பன்னிரண்டு மாதங்களை விஞ்சாத காலப்பகுதியொன்றுக்கு மறியற்றண்டனையுடன் தண்டிக்கப்படற்பாலதான தவறொன்றுக்கு மறியற்றண்டனைத் தீர்ப்பொன்றை அனுபவித்திருப்பாராயின் அ்லலது உடன் முற்போந்த ஏழு ஆண்டு காலப்பகுதியின் போது மறியற் தண்டனைத் தீர்ப்பொன்றை அனுபவிப்பதனை பூர்த்தி செய்திருப்பாராயின் அல்லது மரண தண்டனைக்கு உட்பட்டிருப்பாராயின் அல்லது மரண தண்டனை நிறைவேற்றத்திற்குப் பதிலாக அளிக்கப்பட்ட மறியற்தண்டனைத் தீர்ப்பை அனுபவித்திருப்பாராயின் அல்லது உடன் முற்போந்த

ஏழு ஆண்டு காலப்பகுதியின்போது மறியற் தண்டனைத் தீர்ப்பொன்றை அனுபவிப்ப தனைப் பூர்த்தி செய்திருப்பாராயின் அல் லது; அத்துடன்

(3) அவ் உட்பிரிவின் (ஒ)ஆம் பந்திக்கானகாப்பு வாசகத்தில்–

(i) அக்காப்பு வாசகத்தின் (i) ஆம் பந்தியில் "1970, நவம்பர் 18ஆந் தேதிக்கு முன்னர் உருவாக்கப்பட்ட பதவியொன்றின்கீழ் ஆண்டொன்றுக்கு 6,720 ரூபாவிற்கு குறைவாக" என்னும் சொற்களுக்குப் பதிலாக "2007, யூன் 01ஆந் தேதிக்கு முன்னர் உருவாக்கப்பட்ட பதவி ஒன் றின் கீழ், ஆண்டொன்றுக்கு 2,27,280 ரூபாவிற்கு குறைவாக" என்னும் சொற் களை இடுவதன் மூலமும் ; அத்துடன்

(ii) அக்காப்பு வாசகத்தின் (ii) ஆம் பந்தியில் "1970, நவம்பர் 18 ஆந் தேதிக்குப் பின்னர் உருவாக்கப்பட்ட" என்னும் சொற்களுக்குப் பதிலாக " 2007, யூன் 01ஆந் திகதியின் பின்னர் உருவாக் கப்பட்ட என்னும் சொற்களை இடுவதன் மூலமும்.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 12ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**8**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 12ஆம் பிரிவில் இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:–

(1) அப்பிரிவின் (1)ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன்மூலமும்:–

"(1) ஓர் உள்ளூர் அதிகாரசபையின் வட்டாரம் ஒவ்வொன்றும் அவ்வுள்ளூர் அதிகாரசபைக் கான தேர்தலொன்றின் நோக்கத்துக்காக வாக் கெடுப்புப் பிரதேசமொன்றாகக் கருதப்படுதல் வேண்டும்.";

(2) அப்பிரிவின் (2)ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன்மூலமும்:-

"(2) மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலர் -

(அ) ஓர் உள்ளூர் அதிகாரசபையின் வாக்கெடுப் புப் பிரதேசத்தை, ஆணையாளரினால் வழங்கப்படக்கூடியவாறான பணிப்புகளுக் கிணங்க ஒன்று அல்லது அதற்குமேற்பட்ட வாக்கெடுப்பு மாவட்டங்களாகப் பிரிக்க லாம்;

(ஆ) ஒவ்வொரு வாக்கெடுப்பு மாவட்டத்துக்கும் வேறுபிரித்துக்காட்டும் எழுத்தை அல்லது எழுத்துக்களைக் குறித்தளிக்கலாம் ;

(இ) அத்தகைய ஒவ்வொரு வாக்கெடுப்பு மாவட்டம் தொடர்பிலும், அம்மாவட்டம் தொடர்பிலான வாக்கெடுப்பு நிலையம் எந்த இடத்தில் அமைந்திருக்க வேண்டுமோ அந்த இடத்தைத் தீர்மானிக்கலாம் ; அத்துடன்

(ஈ) மேலே (அ), (ஆ) மற்றும் (இ) என்னும் பந்திகளிற் குறிப்பீடுசெய்யப்பட்ட விபரங்க ளைக் கொண்டுள்ள அறிவித்தலொன்றை வர்த்தமானியில் வெளியிடலாம்.";

(3) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின் வரும் புதிய உட்பிரிவுகளை உட்புகுத்துவதன் மூலமும்:-

(2அ) ஆணையாளர் வேறுவகையாகப் பணித்தா லொழிய, ஒரு வாக்கெடுப்புப் பிரதேசத்தை வாக்கெடுப்பு மாவட்டங்களாகப் பிரித்தலானது அத்தகைய பிரித்தல் செய்யப்பட்ட நேரத்தில் ஒவ்வொரு வாக்கெடுப்பு மாவட் டமும் ஆயிரத்து ஐந்நூறு வாக்காளர்களுக்கு மேற்படா தோரைக் கொண்டிருக்கும் வகையில் அவ்வாறு செய்யப் படுதல் வேண்டும்.

(2ஆ) உட்பிரிவு (2அ) என்பதன் ஏற்பாடுகளுக் கமைய, ஒரு வாக்கெடுப்புப் பிரதேசத்தை வாக்கெடுப்பு மாவட்டங்களாகப் பிரித்தலானது, சந்தர்ப்பம் தேவைப் படுத்தக்கூடியவாறு மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவ லரினால் மாற்றப்படலாமென்பதுடன், அத்தகைய மாற்றம் செய்யப்படுவதன்மேல், (2) ஆம் உட்பிரிவின் (அ), (ஆ) மற்றும் (இ) என்னும் பந்திகளிற் குறிப்பீடு செய்யப்பட்ட விபரங்களையும் அத்தகைய மாற்றம் பயனுக்கு வர வேண்டிய தேதியையும் குறித்துரைக்கின்ற அறிவித்தலொன்றை அவர் வர்த்தமானியில் வெளியி டுதலும் வேண்டும்.

(2இ) விடயத்துக்கேற்ப, (2)ஆம் உட் பிரிவின் (ஈ) என் னும் பந்தியின்கீழ் அல்லது (3) ஆம் உட்பிரிவின்கீழ் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட அறிவித்தலொன்று, ஆணையாளர் தீர்மானிக்கக்கூடியவாறான அத்தகைய முறையில் உத்தேசிக்கப்பட்ட திருத்தங்கள் பற்றிப் பொது மக்களுக்கு அறிவித்தபின்னரும், உத்தேசிக்கப்பட்ட திருத்தங்கள் தொடர்பான முறையீடுகளைச் செய்வதற் குப் பொதுமக்களுக்குச் சந்தர்ப்பமொன்றை அளித்த பின்னரும், அவ்வறிவித்தலிற் குறித்துரைக்கப்பட வேண்டுமெனத் தேவைப்படுத்தப்படுகின்றவையும், (2)ஆம் உட்பிரிவின் (இ) என்னும் பந்தியிற் குறிப்பீடு செய்யப்பட்டவையுமான விபரங்கள் தொடர்பாகக் காலத்துக்குக் காலம் திருத்தப்படலாம்."; அத்துடன்

(4) அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவில், "ஒரே ஒரு வாக் கெடுப்பு நிலையமே இருத்தல் வேண்டுமேயன்றி அதற்கு மேற்பட இருத்தலாகாது.". என்னும் சொற்களுக்குப் பதிலாக "ஒன்றுக்குக் குறையாத வாக்கெடுப்பு நிலையம் இருத்தல் வேண்டும்." என்னும் சொற்களை இடுவதன் மூலமும்.

**9**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 12அ என்னும் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படு கின்றது:- முதன்மைச் சட்டவாக்கத்தின் 12அ என்னும் பிரிவை மாற்றீடு செய்தல்.

"ஓர் உள்ளூர் அதிகார சபையின் அல்லது ஒரு வட்டாரத்தின் நிருவாக எல்லைகளை மாற்றுதல்.

*12அ. ஏதேனும் உள்ளூர் அதிகாரசபையின் நிருவாக எல்லைகள், அத்தகைய உள்ளூர் அதிகாரசபை எந்தச் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்டதோ அந்தச் சட்டத்தின்கீழ் மாற்றப்படுமிடத்து, அல்லது ஓர் உள்ளூர் அதிகாரசபைப் பிரதேசம் எந்த வட்டாரமாகப் பிரிக்கப்படுகின்றதோ அந்த ஏதேனும் வட்டாரத்தின் எல்லைகள் இக்கட்டளைச் சட்டத்தின் 3ஈ என்னும் பிரிவின்கீழ் அமைச்சரால் மாற்றப்பட்டுள்ளவிடத்து, விடயத்துக்கேற்ப, எவ்வுள்ளூரதிகாரசபையின் அல்லது வட்டாரத்தின் நிருவாக எல்லைகள் அல்லது எல்லைகள் அவ்வாறு மாற்றப்பட்டனவோ அத்தகைய உள்ளூர் அதிகாரசபைக்கும் அல்லது வட்டாரத்துக்கும் அது தொடர்பிலும் 12 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.".*

முதன்மைச் சட்டவாக்கத்தின் 12ஆ என்னும் பிரிவைத் திருத்துதல்.

**10.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 12ஆ என்னும் பிரிவில், "தேருநர் நிரல் ஒன்றினை" என்னும் சொற்களுக்கும், "தேர்தற் பிரதேசத்துக்கு நேரொத்ததாகவுள்ளதான" என்னும் சொற்களுக்கும் பதிலாக முறையே "அத்தகைய தேர்தற் பிரதேசத்தின் ஒவ்வொரு வட்டாரத்துக்குமான தேருநர் நிரல் ஒன்றினை" என்னும் சொற்களையும், "அத்தகைய தேர்தற் பிரதேசத்தின் அவ்வவ் வட்டாரத்துக்கும் நேரொத்ததாகவுள்ளதான" சொற்களையும் இடுவதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 12ஈ என்னும் பிரிவைத் திருத்துதல்.

**11.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 12ஈ என்னும் பிரிவு, "ஏதேனும் தேர்தல் பிரதேசத்துக்கென 12ஆ என்னும் பிரிவின்கீழ் அல்லது 12இ என்னும் பிரிவின்கீழ் தயாரிக்கப்பட்டு அத்தாட்சிப்படுத்தப்பட்ட தேருநர் நிரல்" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக, "ஏதேனும் தேர்தல் பிரதேசத்துக்கென 12ஆ என்னும் பிரிவின்கீழ் அல்லது 12இ என்னும் பிரிவின்கீழ் தயாரிக்கப்பட்டு அத்தாட்சிப்படுத்தப்பட்ட ஒவ்வொரு வட்டாரத்துக்குமான தேருநர் நிரல்" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 12ஊ என்னும் பிரிவைத் திருத்துதல்.*

**12.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 12ஊ என்னும் பிரிவில், "ஏதேனும் உள்ளூர் அதிகாரசபையின் எல்லைகளில் செய்யப் பட்ட மாற்றம்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "விடயத்துக் கேற்ப, ஏதேனும் உள்ளூர் அதிகாரசபையின் எல்லைகளில் அல்லது தேர்தற் பிரதேசத்தின் எல்லைகளில் செய்யப்பட்ட மாற்றம்" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தாற்றிருத் தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 16ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**13.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 16 ஆம் பிரிவில், "ஏதேனும் தேர்தற் பிரதேசத்துக்கென தேருநர் நிரல்" என்னும் சொற்களுக் குப் பதிலாக "ஏதேனும் தேர்தற் பிரதேசத்தின் வட்டாரங்களுக் கான தேருநர் நிரல்கள்" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 17ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**14.** ஆயிரத்துத் தொளாயிரத்து எழுபத்தேழாம் ஆண்டின் 24 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 17 ஆம் பிரிவு, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரி வில், "ஏதேனும் தேர்தல் பிரதேசத்துக்கென தேருநர் நிரல்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "ஏதேனும் தேர்தற் பிரதேசத் தின் வட்டாரங்களுக்கான தேருநர் நிரல்கள்" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் மேலும் திருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 18ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**15.** ஆயிரத்துத் தொளாயிரத்து எழுபத்தேழாம் ஆண்டின் 24 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 18 ஆம் பிரிவு, இத்தாற் பின்வருமாறு மேலும் திருத்தப்படுகின்றது :-

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில், "ஏதேனும் தேர்தற் பிரதேசத்துக்கான தேருநர் நிரல்" என்னும் சொற் களுக்குப் பதிலாக, "ஏதேனும் தேர்தற் பிரதேசத்தின் வட்டாரங்களுக்கான தேருநர் நிரல்கள்" என்னும் சொற்களை இடுவதன்மூலமும்;"; அத்துடன்

(2) அப்பிரிவின் (5) ஆம் உட்பிரிவில், "தேருநர் நிரல்", "அந்நிரலில்" என்னும் சொற்களுக்குப் பதிலாக முறையே "தேருநர் நிரல்கள்","அந்நிரல்களில்" என்னும் சொற்களை இடுவதன்மூலமும்.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 19ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**16**. ஆயிரத்துத் தொளாயிரத்து எழுபத்தேழாம் ஆண்டின் 24 ஆம் இலக்கச் சட்டத்தினால் கடைசியாகத் திருத்தப்பட்ட வாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 19 ஆம் பிரிவு, இத்தாற் பின்வருமாறு மேலும் திருத்தப்படுகின்றது :-

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில், அவ்வுட்பிரிவின் (அ) என்னும் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன்மூலமும் :-

"(அ) அதே தேர்தற் பிரதேசத்தின் வட்டாரங்களிலாயினுஞ்சரி அல்லது வெவ்வேறு தேர்தற் பிரதேசங்களின் வட்டாரங்களிலாயினுஞ்சரி, ஒன்றுக்கு மேற்பட்ட தேருநர் நிரல்களில் ; அல்லது";

(2) அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவில், அவ்வுட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில் "தேர்தற் பிரதேசம் அமைந்துள்ள" என்னும் சொற்களுக்குப் பதிலாக "வட்டாரம் அமைந்துள்ள" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 20ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**17**. ஆயிரத்துத் தொளாயிரத்து எழுபத்தேழாம் ஆண்டின் 24 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 20 ஆம் பிரிவு, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில், "ஏதேனும் தேர்தற் பிரதேசத்துக்கான தேருநர் நிரல்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "ஏதேனும் தேர்தற் பிரதேசத்தின் வட்டாரங்களுக்கான தேருநர் நிரல்கள்" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் மேலும் திருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 22ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**18**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 22 ஆம் பிரிவில், "நிரல்" என்னும் சொல் தோன்றுமிடங்களில் எல்லாம் அதற்குப் பதிலாக "நிரல்கள்" என்னும் சொல்லை இடுவதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 23ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**19**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 23 ஆம் பிரிவில், "ஏதேனும் தேர்தற் பிரதேசத்துக்கான தேருநர் நிரலானது," என்னும் சொற்களுக்குப் பதிலாக "ஏதேனும் தேர்தற் பிரதேசத்தின் வட்டாரங்களுக்கான தேருநர் நிரல்களானவை," என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது.

**20.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 26 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது :-

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 26ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.*

*"நியமன காலப்பகுதி பற்றிய அறிவித்தல்.*

26. உள்ளூர் அதிகாரசபையொன்றின் உறுப்பினர்களுக்கான தேர்தலொன்று ஏதேனுமாண்டில் நடாத்தப்படவிருக்கும் போதிலெல்லாம், அத்தகைய உள்ளூர் அதிகார சபையின் தேர்தற் பிரதேசம் எந்த மாவட்டத்தில் அமைந்துள்ளதோ அந்த மாவட்டத்தின் தேர்தல்கள் அலுவலர், அத்தகைய தேர்தலை நடாத்துவதற்கு அவருக்குள்ள உளக்கருத்துப் பற்றிய அறிவித்தலொன்றை வெளியிடுதல் வேண்டும். அவ்வறிவித்தலானது, அத்தேர்தற் பிரதேசத்தின் ஒவ்வொரு வட்டாரத்திலும் எந்த அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சிகளின் அத்துடன் சுயேச்சைக் குழுக்களின் வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனரோ அக்கட்சிகளின் அத்துடன் குழுக்களின் நியமனப்பத்திரங்களைப் பெறுவதற்கு நியமிக்கப்பட்ட உதவித் தெரிவத்தாட்சி அலுவலரின் பெயரையும், அவ்வவ் உதவித் தெரிவத்தாட்சி அலுவலரினால் எந்தக் காலப் பகுதியின்போதும் நேரங்களிலும் நியமனப்பத்திரங்கள் பெறப்படவேண்டுமோ (இதனகத்துப்பின்னர் "நியமன காலப்பகுதி" எனக் குறிப்பீடு செய்யப்படும்) அந்தக் காலப்பகுதியையும் நியமனப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படவேண்டிய இடத்தையும் குறித்துரைத்தல் வேண்டும். அத்தகைய நியமன காலப்பகுதி, அறிவித்தல் வெளியிடப்பட்ட தேதிக்குப் பின்னர் பதினான்காவது நாளன்று தொடங்குதல் வேண்டுமென்பதுடன், அடுத்த நாளின் நண்பகல் பன்னிரண்டு மணிக்கு முடிவுறுதலும் வேண்டும். அவ்வறிவித்தலானது, ஒரு தேர்தற் பிரதேசம் தொடர்பாக அங்கீகரிக்கப்பட்ட சின்னங்கள் குறித்தொதுக்கப்படும் தேதியையும், நேரத்தையும், இடத்தையும் குறித்துரைத்தலும் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 27அ என்னும் பிரிவைத் திருத்துதல்.

**21.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 27அ என்னும் பிரிவு, அப்பிரிவின் (3), (4), (5) ஆகிய உட்பிரிவுகளை நீக்கிவிடுவதன் மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 28ஆம் பிரிவைத் திருத்துதல்.

**22.** ஆயிரத்துத் தொளாயிரத்து தொண்ணூறாம் ஆண்டின் 25ஆம் இலக்கச் சட்டத்தினால் கடைசியாகத் திருத்தப்பட்ட வாறான முதன்மைச் சட்டவாக்காத்தின் 28ஆம் பிரிவு, இத்தாற் பின்வருமாறு மேலும் திருத்தப்படுகின்றது:-

(1) அப்பிரிவின் (1)ஆம் உட்பிரிவை நீக்கஞ்செய்து அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன் மூலமும்:-

"(1) இக்கட்டளைச் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழ் உள்ளூர் அதிகாரசபையொன்றின் உறுப்பின ரொருவராகத் தேர்ந்தெடுக்கப்படுவதற்குத் தகைமை பெற்றுள்ள ஆளெவரும் அத்தகைய உள்ளூர் அதிகார சபையின் தேர்தல் இடப்பரப்பின் ஏதேனும் வட்டா ரத்திற்கு தேர்தலுக்கான வேட்பாளர் ஒருவராக பெயர்குறித்து நியமிக்கப்படலாம். ஆயினும் ஓர் உள்ளூர் அதிகார சபையின் ஏதேனும் தேர்தல் இடப் பரப்பின் ஒன்றுக்கு மேற்பட்ட வட்டாரம் தொடர்பில் தேர்தலுக்கான வேட்பாளர் ஒருவராக அத்தகைய ஆளெவரும் பெயர்குறித்து நியமிக்கப்படுதலா காது.";

(2) அப்பிரிவின் (1அ) மற்றும் (1ஆ) என்னும் பிரிவுகளை நீக்கம் செய்வதன் மூலமும் ;

(3) அப்பிரிவின் (2)ஆம் உட்பிரிவை நீக்கஞ் செய்து அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன் மூலமும்:

"(2) ஏதேனும் அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சி அல்லது சுயேச்சை வேட்பாளர்களாகப் போட்டியிடும் ஆட்கள்குழு எதுவும் (இதனகத்துப்பின்னர் "சுயேச்சைக் குழு" எனக் குறிப்பீடு செய்யப்படும்) ஏதேனும் உள்ளூர் அதிகாரசபையின் உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப் படும் நோக்கத்திற்கு அத்தகைய உள்ளூர் அதிகார

*சபையின் எல்லா வட்டாரங்கள் தொடர்பிலும் பொருள ளவில் முதலாம் அட்டவணையில் தரப்பட்டுள்ள படிவத்தில்,-*

*(அ) அந்த உள்ளூர் அதிகாரசபையின் வட்டாரம் ஒவ்வொன்று தொடர்பிலும் அப்பல்வேறு வட்டாரங்கள் தொடர்பில் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்படவேண்டிய உறுப்பினர்களின் எண்ணிக்கைக்குச் சமமாக இருக்கவேண்டிய பெயர்குறித்து நியமிக்கப்படும் வேட்பாளர்களினதும்; அத்துடன்*

*(ஆ) எந்த வேட்பாளர்களிடையேயிருந்து அந்த உள்ளூர் அதிகாரசபையின் உறுப்பினர்கள் இக்கட்டளைச் சட்டத்தின் 65அ என்னும் பிரிவின் கீழ் தெரிந்தெடுக்கப்பட்டு, நியமிக்கப்பட வேண்டுமோ அந்த வேட்பாளர்களாக (அ) என் னும் பந்தியின்கீழ் தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய பெயர்குறித்து நியமிக்கப்படும் ஆட்களின் மொத்த எண்ணிக்கையின் முப்பது சதவீதத் திற்குச் சமமானவாறு அத்தகைய எண்ணிக்கை யினரான மேலதிக ஆட்களினதும்,*

*பெயர்களைத் தந்து ஒரேயொரு நியமனப்பத்தி ரத்தைச் சமர்ப்பித்தல் வேண்டும்.*

*ஆயின் இப்பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட முப்பது சதவீதத்தை உருவாக்கும் எண்ணிக்கை முழு எண்ணாகவும் பின்னமாகவும் இருக்கு மிடத்து, முழு எண் இப்பந்தியின் நோக்கத்துக் காக முப்பது சதவீதமாக அமைய வேண்டிய எண் ணாக இருப்பதாகக் கருதப்படுதல் வேண்டும்.*

*நியமனப்பத்திரம் இணைப்பிரதியில் "பிரதி" எனத் தெளிவாக எழுதப்பட்டு இணைப்பிரதியில் தயாரிக்கப்படுதல் வேண்டும். தெரிவத்தாட்சி அலுவலர் செயல்முறைச் சாத்தியப்படக் கூடிய விரைவில் அவரால் பெறப்பட்ட நியமனப்பத்தி ரம் ஒவ்வொன்றினதும் பிரதியொன்றைத் தயாரித்து நியமனப்பத்திரத்தின் அத்தகைய பிரதிகளை அவரது அறிவித்தல் பலகையில் வெளிக்காட்டி வைத்தல் வேண்டும்.".*

(4) அப்பிரிவின் (2)ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின் வரும் புதிய உட்பிரிவுகளை உட்புகுத்துவதன் மூலமும்:

(2அ) ஓராம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட பெயர் நியமனப்பத்திரம் –

(அ) அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியொன்றின் விடயத்தில் அத்தகைய கட்சியின் செயலாளரால் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட முகவர் அல்லது சமர்ப்பிக்கப்படும் பெயர் நியமனப் பத்திரத்தில் பெயர் காணப்படுகின்ற, அத்தகைய நோக்கத்துக்காகச் செயலாளரால் பெயர் குறித்து நியமிக்கப்பட்டுள்ள வேட்பாளர் ஒருவரால் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும் ; அத்துடன்

(ஆ) சுயேச்சைக் குழுவொன்றின் விடயத்தில் அத்தகைய குழுவின் தலைவரால் அல்லது சமர்ப்பிக்கப்படும் பெயர் நியமனப்பத்திரத்தில் அத்தகைய நோக்கத்துக்காகத் தலைவரால் பெயர்குறித்து நியமிக்கப்பட்டுள்ள, எந்த வேட்பாளரின் பெயர் காணப்படுகின்றதோ அந்த வேட்பாளரால் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

(2ஆ) இக்கட்டளைச் சட்டத்தில் எவையேனும் ஏற்பாடுகள் முரணாக இருப்பது எவ்வாறிருப்பினும், வேட்பாளர்களினதும் இப்பிரிவின் (2)ஆம் உட்பிரிவின்கீழ் சமர்ப்பிக்கப்பட்ட நியமனப் பத்திரம் ஒவ்வொன்றிலும் எந்த மேலதிக ஆட்களின் பெயர்கள் காணப்படுகின்றனவோ அந்த மேலதிக ஆட்களினதும் மொத்த எண்ணிக்கையின் இருபத்தைந்து சதவீதம் பெண்களையும் இளைஞர்களையும் கொண்டிருக்கலாம்.

(2இ) விடயத்துக்கேற்ப, இப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் அல்லது (2ஆ) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட இருபத்தைந்து சதவீதமாக அமையும் எண்ணிக்கை முழு எண்ணாகவும் பின்னமாகவும் இருக்குமிடத்து, முழு எண்

*அவ்வுட்பிரிவின் நோக்கத்திற்கு இருபத்தைந்து சதவீதமாக அமைய வேண்டிய எண்ணாக இருப்பதாகக் கருதப்படுதல் வேண்டும்.".*

(5) *அப்பிரிவின் (4)ஆம் உட்பிரிவில் "பெயர்குறித்து நியமிக்கப்படவுள்ள ஒவ்வொரு வேட்பாளரின தும் சம்மதம்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "பெயர்குறித்து நியமிக்கப்படும் ஒவ்வொரு வேட் பாளரினதும் ஒவ்வொரு ஆளினதும் சம்மதம்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;*

(6) *அப்பிரிவின் (4அ) என்னும் உட்பிரிவில் "இளைஞர் வேட்பாளர்" என்னும் சொற்கள் அவ்வுட்பிரிவில் எங்கெங்கு தோன்றுகின்றதோ அவற்றுக்குப் பதிலாக "இளைஞர்" என்னும் சொல்லை இடுவதன் மூலமும்;*

(7) *அப்பிரிவின் (4அ) என்னும் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவை உட்புகுத் துவதன் மூலமும்:-*

*"(4ஆ) ஆயிரத்துத் தொளாயிரத்து எழுபத் தைந்தாம் ஆண்டின் 1ஆம் இலக்க சொத்துக்களையும் பொறுப்புக்களையும் வெளிப்படுத்துதற் சட்டத்தின் கீழ் சொத்துக்களினதும் பொறுப்புக்களின தும் வெளிப்படுத்துதலொன்று எந்த வேட்பாளரினதும் ஆளினதும் பெயர் கள் நியமனப்பத்திரமொன்றில் காணப் படுகின்றனவோ அந்த ஒவ்வொரு வேட்பாளர் மற்றும் ஆள் தொடர்பில் அச்சட்டத்தின்கீழ் விதித்துரைக்கப்பட்ட வாறான படிவத்தில் அத்தகைய நிய மனப்பத்திரத்திரம் சமர்ப்பிக்கப்பட்டு மூன்று மாதங்களுக்குள் சமர்ப்பிக்கப்பட வேண்டும் எனத் தேவைப்படுத்தப்படு தல் வேண்டும்.".*

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 29ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**23.** *ஆயிரத்துத்தொளாயிரத்து எண்பத்தேழாம் ஆண்டின் 24 ஆம் இலக்கச் சட்டத்தினால் கடைசியாகத் திருத்தப்பட்ட வாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 29 ஆம் பிரிவு, இத்தாற் பின்வருமாறு மேலும் திருத்தப்படுகின்றது :-*

(1) (அ) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவையும் (2) ஆம் உட்பிரிவையும் நீக்கிவிட்டு அவற்றுக்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன் மூலமும் :-

“(1) ஒவ்வோர் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியும் சுயேச்சைக் குழுவும், 26 ஆம் பிரிவின்கீழான அறிவித்தல் வெளியிடப்பட்ட தேதிக்கும் அவரது நியமனப்பத்திரம் சமர்ப்பிக்கப்படுவதற்கும் இடையே, அத் துடன் எவ்விடயத்திலும் பெயர்நியமன காலப்பகுதி முடிவடைவதற்கு நேர்முற்போந்த நாளன்று நண்பகல் பன்னிரண்டு மணிக்குப் பிந்தாமல், நியமனப்பத்திரம் எந்த உதவித் தெரிவத்தாட்சி அலுவலரிடம் சமர்ப்பிக்கப்பட வுள்ளதோ அந்த உதவித் தெரிவத்தாட்சி அலுவலரிடம், சட்டமுறை நாணயத்திலான,

(i) அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியொன்றி னால் பெயர்குறித்து நியமிக்கப்படும் ஒவ் வொரு வேட்பாளர் மற்றும் ஒவ்வொரு மேலதிக வேட்பாளர் தொடர்பிலும் ஐயாயி ரம் ரூபா ; அத்துடன்

(ii) சுயேச்சைக் குழுவொன்றினால் பெயர் குறித்து நியமிக்கப்படும் ஒவ்வொரு வேட்பா ளர் மற்றும் ஒவ்வொரு மேலதிக வேட்பா ளர் தொடர்பிலும் பத்தாயிரம் ரூபா,

பணத்தொகை ஒன்றை வைப்பிலிடுதல் வேண்டும்.

(ஆ) சட்டபூர்வமான நாணயத்திலான வைப்பீடு-

(i) அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சி யொன்றின் விடயத்தில் அத்தகைய அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியின் செயலாளரால் அல்லது அவரது அதி காரமளிக்கப்பட்ட முகவரால் ; அத்து டன்

(ii) சுயேச்சைக் குழுவொன்றின் விடயத்தில் சுயேச்சைக் குழுவின் தலைவரால் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

(2) இவ்வுட்பிரிவின்கீழ் வேட்பாளரொருவரின் சார்பில் செலுத்தப்பட்ட வைப்புப் பணமெதுவும், இவ்வுட்பிரிவில் குறித்துரைக்கப்பட்ட காலத்தினுள் செலுத்தப்பட்டாலொழிய, உதவித் தெரிவத்தாட்சி அலுவலரினால் ஏற்றுக் கொள்ளப்படுதலாகாது ;

(2) அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவில் "தெரிவத்தாட்சி அலுவலரால் ஏற்றுக்கொள்ளப்படுமிடத்து," என்னும் சொற்களுக்குப் பதிலாக, "உதவித் தெரிவத்தாட்சி அலுவலரினால் ஏற்றுக்கொள்ளப்படுமிடத்து," என்னும் சொற்களை இடுவதன்மூலமும் ;

(3) அப்பிரிவுக்கான ஓரக்குறிப்புக்குப் பதிலாகப் பின்வரும் ஓரக்குறிப்பை இடுவதன் மூலமும் :-

"வேட்பாளர்களின் சார்பில்
செலுத்தப்பட்ட வைப்புப்
பணங்கள்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 30ஆம் பிரிவைத் திருத்துதல்.

**24.** ஆயிரத்துத்தொளாயிரத்து தொண்ணூறாம் ஆண்டின் 25 ஆம் இலக்கச் சட்டத்தினால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 30 ஆம் பிரிவு, இத்தாற் பின்வருமாறு மேலும் திருத்தப்படுகின்றது :-

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில், "தெரிவத்தாட்சி அலுவலரொருவரிடம்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "உதவித் தெரிவத்தாட்சி அலுவலரொருவரிடம்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

(2) அப்பிரிவின் (4) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன் மூலமும்:-

"(4) எந்த வேட்பாளர் சார்பாக ஓர் அங்கீகரிக்கப்பட்ட அரசியற்கட்சியினால் அல்லது சுயேச்சைக் குழுவினால் வைப்புப்பணமொன்று செலுத்தப்பட்டதோ அந்த வேட்பாளரொருவர் தேர்ந்தெடுக்கப்படாதவிடத்தும்,

அத்தகைய வேட்பாளரினால் பெற்றுக்கொள்ளப்பட்ட வாக்குகளின் எண்ணிக்கை, அவர் எந்த வட்டாரத்தில் போட்டியிட்டாரோ அந்த வட்டாரத்தின் இடப்பட்ட செல்லுபடியான வாக்குகளின் மொத்த எண்ணிக்கை யின் பன்னிரண்டிலொருபங்கை விஞ்சாதவிடத்தும், அத்தகைய வேட்பாளர் சார்பாக செலுத்தப்பட்ட வைப்புப்பணம் இழப்பிக்கப்பட்டதாக வெளிப்படுத்தப் படுதல் வேண்டும். அது எந்த உதவித் தெரிவத்தாட்சி அலுவலரிடம் வைப்பிலிடப்பட்டதோ அந்த உதவித் தெரிவத்தாட்சி அலுவலர் அத்தகைய தொகையை வைப்புக் கணக்கிலிருந்து திரட்டு நிதியத்துக்குக் கைமாறுதல் வேண்டும் ; அத்துடன் ஏனைய ஒவ்வொரு விடயத்திலும் வைப்புப் பணமானது, தேர்தலின் முடிவு வெளிப்படுத்தப்பட்ட பின்னர் கூடியளவு விரைவாக, வைப்புப்பணத்தைச் செலுத்தியவராகவுள்ள வேட்பா ளருக்குத் திருப்பிக் கொடுக்கப்படுதல் வேண்டும்.

ஆயினும் ஏதேனும் அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சி அல்லது சுயேச்சைக் குழு அத்தகைய உள்ளூர் அதிகார சபை இடப்பரப்பில் போட்டியிட்ட எல்லா அங்கீகரிக் கப்பட்ட அரசியற் கட்சிகளாலும் சுயேச்சைக் குழுக்களா லும் பெறப்பட்ட மொத்த செல்லுபடியான வாக்குகளின் எண்ணிக்கையின் இருபதிலொன்றிற்கும் அதிகமாகப் பெறத் தவறுமிடத்து, விடயத்திற்கேற்ப அத்தகைய அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சிகளால் அல்லது சுயேச்சைக் குழுவால் சமர்ப்பிக்கப்பட்ட பெயர் நியமனப் பத்திரத்தில் எந்த மேலதிக ஆட்களின் பெயர்கள் காணப்படுகின்றனவோ அந்த எல்லா மேலதிக ஆட்கள் தொடர்பிலும் விடயத்திற்கேற்ப அத்தகைய அங்கீகரிக் கப்பட்ட அரசியற் கட்சி அல்லது சுயேச்சைக் குழு ஒவ் வொன்றினாலும் செய்யப்பட்ட வைப்பீடு இழப்பிக்கப் பட்டதாகக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன் அத்த கைய வைப்பீட்டின் கைமாற்றம் தொடர்பில் இவ்வுட்பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடையனவாதலும் வேண்டும்.”.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 31ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**25.** ஆயிரத்துத்தொளாயிரத்து தொண்ணூறாம் ஆண்டின் 25 ஆம் இலக்கச் சட்டத்தினால் கடைசியாகத் திருத்தப்பட்ட வாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 31 ஆம் பிரிவு, இத்தாற் பின்வருமாறு மேலும் திருத்தப்படுகின்றது :-

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் -

(அ) "தெரிவத்தாட்சி அலுவலர்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

(ஆ) அவ்வுட்பிரிவின், (ஆஆ) மற்றும் (ஆஆஆ) என்னும் பந்திகளை நீக்கிவிடுவதன் மூலமும் ;

(இ) அவ்வுட்பிரிவின் (ஈ) என்னும் பந்தியை நீக்கி விடுவதன் மூலமும் ;

(2) அப்பிரிவின் (1அ) என்னும் உட்பிரிவில் "தெரிவத்தாட்சி அலுவலர் ஒருவர்" என்னும் சொற்களுக்கும் "தெரிவத்தாட்சி அலுவலர்" என்னும் சொற்களுக்கும் பதிலாக, முறையே "உதவித்தெரிவத்தாட்சி அலுவலர்" என்னும் சொற்களையும் "உதவித் தெரிவத்தாட்சி அலுவர் ஒருவர்" என்னும் சொற்களையும் இடுவதன் மூலம்;

(3) அப்பிரிவின் (2)ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின் வரும் புதிய உட்பிரிவைச் சேர்ப்பதன் மூலம்:

(3) விடயத்திற்கேற்ப ஏதேனும் அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியால் அல்லது சுயேச்சைக் குழுவொன்றினால் சமர்ப்பிக்கப்பட்ட பெயர் நியமனப்பத்திரமொன்றில் எந்த வேட்பாளரின் அல்லது ஆளின் பெயர் காணப்படுகின்றதோ அந்த வேட்பாளர் ஒருவர் அல்லது எவரேனும் ஆள் அத்தகைய வேட்பாளரின் அல்லது ஆளின் தவறுகை காரணமாக தகைமையிழந்தவராகக் காணப்படின்-

(அ) வேட்பாளர் அல்லது சம்பந்தப்பட்ட ஆள் ஓர் இளைஞராக இருந்து அவரது நியமனப் பத்திரத்துடன் அவரது பிறப்புச் சான்றிதழின்

அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதியொன்றை அல்லது பிறப்புச் சான்றிதழ் கிடைக்காத சந்தர்ப்பத்தில் அவரது பிறந்த திகதியை அத்தாட்சிப்படுத்தி அத்தகைய இளைஞரால் கையொப்பமிடப்பட்ட சத்தியக் கடதாசியொன்றை இணைத்திருக்குமிடத்து;

(ஆ) (அத்தகைய பெயர்குறித்த நியமனப்பத்திரத்தில் உள்ளடக்கப்படவேண்டுமெனத் தேவைப்படுத்தப்பட்ட அவரது சம்மதத்தை நியமனப் பத்திரத்தில் புறக்குறிப்பு செய்வித்திருக்குமிடத்து) அரசியலமைப்பிற்கான ஏழாம் அட்டவணையில் தரப்பட்டுள்ள படிவத்தில் அவரது சத்தியப் பிரமாணத்தை அல்லது உறுதியுரையை நியமனப்பத்திரத்துடன் இணைக்கச் செய்வித்திருக்குமிடத்து,

அவ்வாறு சமர்ப்பிக்கப்பட்ட நியமனப்பத்திரம் நிராகரிக்கப்படுதலாகாது, ஆனால் இவ்வுட்பிரிவில் குறித்துரைக்கப்பட்ட எவையேனும் காரணங்களின் நிமித்தம் தகைமையிழந்தவராகக் காணப்பட்ட வேட்பாளரின் அல்லது சம்பந்தப்பட்ட ஆளின் பெயர் அவ்வாறு சமர்ப்பிக்கப்பட்ட பெயர் நியமனப்பத்திரத்திலிருந்து அப்புறப்படுத்தப்படுதல் வேண்டும். எவரேனும் வேட்பாளரின் அல்லது எவரேனும் ஆளின் பெயர், நியமனப்பத்திரத்திலிருந்து அப்புறப்படுத்தப்பட்டவிடத்து, விடயத்திற்கேற்ப, அத்தகைய நியமனப் பத்திரத்தைச் சமர்ப்பித்த அரசியற்கட்சி அல்லது சுயேச்சைக் குழு அதன்பின்னர் அவ்வாறு அப்புறப்படுத்தப்பட்ட பெயரை வேறு ஏதேனும் புதிய பெயர் கொண்டு பதிலீடு செய்வதற்கு உரித்துடையவராதலாகாது என்பதுடன் எந்த வேட்பாளரின் அல்லது வேறு ஆளின் பெயர்கள் அப்புறப்படுத்தப்பட்டனவோ அந்த வேட்பாளர் அல்லது ஆள் தொடர்பில் செய்யப்பட்ட வைப்பீடு இழப்பிக்கப்படுதலும் வேண்டும்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 35ஆம் பிரிவைத் திருத்துதல்.

**26.** ஆயிரத்துத்தொளாயிரத்துத் தொண்ணூறாம் ஆண்டின் 25 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 35 ஆம் பிரிவு, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவை நீக்கஞ்செய்து பின்வரும் உட்பிரிவை பதிலீடு செய்வதன்மூலம் இத்தாற் பின்வருமாறு மேலும் திருத்தப்படுகின்றது :-

*"(1) (அ) ஏதேனும் தேர்தல் பிரதேசத்தின் விடயத்தில், பெயர் நியமனக் காலப்பகுதியின் முடிவில் உதவி தெரிவத்தாட்சி அலுவலர்-*

(i) *ஏதேனும் அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியின் அல்லது சுயேச்சைக் குழுவின் சார்பில் நியமனப்பத்திரம் எதுவும் முறையாக பெறப்படவில்லை என; அல்லது*

(ii) *அவரால் பெறப்பட்ட எல்லா நியமனப் பத்திரங்களும் விடயத்திற்கேற்ப, நிராகரிக்கப் பட்டுள்ளது அல்லது அத்தகைய நியமனப் பத்திரத்தில் காணப்படும் எல்லா வேட்பாளர் களினதும் பெயர்கள் 31ஆம் பிரிவின் (3)ஆம் உட்பிரிவின் நியதிகளின்படி அத்தகைய நியமனப்பத்திரத்திலிருந்து அப்புறப்படுத்தப் பட்டுள்ளன,*

*எனக் காணுமிடத்து, உதவித் தெரிவத்தாட்சி அலுவலர் உடன டியாக விடயத்திற்கேற்ப, நியமனப்பத்திரங்கள் எவையும் கிடைக்கப்பெறவில்லை அல்லது அவரால் பெறப்பட்ட எல்லா நியமனப்பத்திரங்களும் நிராகரிக்கப்பட்டுள்ளன அல்லது அத்தகைய நியமனத்தைப்பத்திரத்தில் காணப்பட்ட வேட்பாளர் களின் எல்லாப் பெயர்களும் 31ஆம் பிரிவின் (3)ஆம் உட்பிரி வின்கீழ் அத்தகைய நியமனப்பத்திரத்திலிருந்து அப்புறப்படுத் தப்பட்டுள்ள என்ற நிகழ்வை பிரதேசம் அமைந்துள்ள மாவட் டத்தின் தேர்தல்கள் அலுவலருக்கு அறிக்கையிடுதல் வேண்டும்.*

*(ஆ) தேர்தல்கள் அலுவலர் அவ் அறிக்கை கிடைக்கப்பெற்ற ஏழுநாட்களுக்குப் பிந்தாமல் மேலுமொரு பெயர் நியமனக் காலப்பகுதியை விதித்துரைத்து அறிவித்தலொன்றை வெளியிடு தல் வேண்டும். அறிவித்தல் நியமனப்பத்திரங்கள் உதவித் தெரி வத்தாட்சி அலுவலரால் அவரது அலுவலகத்தில் பெறப்பட வுள்ள காலப்பகுதியை (இதனகத்துப்பின்னர் "இரண்டாம் பெயர் நியமனக் காலப்பகுதி" எனக் குறிப்பீடு செய்யப்படும்) குறித் துரைத்தல் வேண்டும் என்பதுடன் அதன்மீது இக்கட்டளைச் சட்டத்தின் எல்லா ஏற்பாடுகளும் ஏற்புடையனவாதலும் வேண் டும்.".*

**27**. ஆயிரத்துத்தொளாயிரத்துத் தொண்ணூறாம் ஆண்டின் 25 ஆம் இலக்கச் சட்டத்தினால் கடைசியாகத் திருத்தப்பட்ட வாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 36 ஆம் பிரிவு, இத்தாற் பின்வருமாறு மேலும் திருத்தப்படுகின்றது :- முதன்மைச் சட்டவாக்கத்தின் 36ஆம் பிரிவைத் திருத்துதல்.

"(ஆ) நியமனப்பத்திரமொன்று அல்லது நியமனப்பத்திரங்கள் நிராகரிக்கப்பட்ட பின்னர் அல்லது ஏதேனும் நியமனப்பத்திரத்தில் அல்லது நியமனப் பத்திரங்களில் காணப்படும் பெயர்கள் அதன்கண் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் காரணத்தினால் 31ஆம் பிரிவின் (3)ஆம் உட்பிரிவின்கீழ் அப்புறப் படுத்தப்படுமிடத்து ஒரு அங்கீகரிக்கப்பட்ட அரசியற்கட்சியின் அல்லது ஒரு சுயேச்சைக் குழுவின் வேட்பாளர்கள் மட்டுமே தேர்தலுக்குப் பெயர் குறித்து நியமிக்கப்பட்டிருக்குமிடத்து உதவித் தெரிவத்தாட்சி அலுவலர் அந்நிகழ்வுபற்றி ஆணை யாளருக்கு அறிவித்தல் வேண்டும். ஆணையாளர் அதன்மீது 28ஆம் பிரிவின் (2)ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியின்கீழ் நியமனப்பத்திரத்தில் எந்த வேட்பாளர்களின் பெயர்கள் காணப் படுகின்றனவோ அந்த வேட்பாளர்களிடையே எந்த வேட்பாளர்கள் அந்த உள்ளூர் அதிகாரசபைக்கு மாநகர முதல்வராகவும் பிரதிமாநகர முதல்வ ராகவும் தெரிவுசெய்யப்பட்டதாக வெளிப் படுத்தப்படுதல் வேண்டும் எனக் குறித்துரைக்கு மாறு விடயத்திற்கேற்ப அத்தகைய அங்கீகரிக்கப் பட்ட அரசியற் கட்சியின் செயலாளருக்கு அல்லது அத்தகைய சுயேச்சைக் குழுவின் தலைவருக்கு அழைப்புவிடுத்தல் வேண்டும். விடயத்திற்கேற்ப அத்தகைய செயலாளர் அல்லது குழுத்தலைவர் அவரது முடிவை ஆணையாளருக்குத் தெரிவித்த தன்மீது அவ்வாறு குறித்துரைக்கப்பட்ட உறுப்பி னரை அந்த உள்ளூர் அதிகாரசபையின் முறையே மாநகர முதல்வராகவும் பிரதி மாநகர முதல்வராக வும் தேர்ந்தெடுக்கப்பட்டதாக வெளிப்படுத்துதல் வேண்டும்.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 37ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**28.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 37 ஆம் பிரிவு, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன்மூலமும் இத்தாற் மேலும் திருத்தப் படுகின்றது :-

"(1) தேர்தல் பிரதேசமொன்றின் வட்டாரம் ஒவ்வொன் றுக்குமென நியமிக்கப்பட்ட பெயர் நியமனக் காலப்பகுதி யின் முடிவில் அத்துடன் எவையேனும் நியமனப்பத்திரங் கள் நிராகரிக்கப்பட்டதன் பின்னர் அல்லது 31 ஆம் பிரிவின் (3)ஆம் உட்பிரிவின்கீழ் ஏதேனும் நியமனப்பத் திரத்தில் அல்லது நியமனப்பத்திரங்களில் காணப்பட்ட பெயர் அதன்கண் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் காரணத்திற்காக அப்புறப்படுத்தப்பட்டவிடத்து அப்பெயர் கள் அப்புறப்படுத்தப்பட்டபின்னர் அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியின் அல்லது சுயேச்சைக் குழுவொன்றின் ஒன்றுக்கு மேற்பட்ட வேட்பாளர்கள் தேர்தலுக்கு முறையாக பெயர்குறித்து நியமிக்கப்பட்டிருக்குமிடத்து உதவித் தெரிவத் தாட்சி அலுவலர் உடனடியாக அத்தேர்தலின் நோக்கத் திற்கு :

(அ) அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியொன்றிலிருந்து வேட்பாளர் ஒவ்வொருவருக்கும் அக்கட்சியின் அங்கீகரிக்கப்பட்ட சின்னத்தையும் ; அத்துடன்

(ஆ) சுயேச்சைக் குழுவொன்றிலிருந்து வேட்பாளர் ஒவ்வொருவருக்கும் ஏதேனும் அங்கீகரிக்கப்பட்ட சின்னத்தையும் அத்துடன் அத்தகைய தேர்தலில் ஒன்றுக்கு மேற்பட்ட சுயேச்சைக் குழுக்கள் போட்டி யிடுமிடத்து,

(i) முதற்கண், போட்டியிடும் சுயேச்சைக் குழுக்களிடையே உடன்படிக்கையால்; அல்லது

(ii) அத்தகைய உடன்பாடு இல்லாதபோது உதவித் தெரிவத்தாட்சி அலுவலர் அவ ரது முழுத்தற்றுணிபின்படி தீர்மானிக்கக்

கூடியவாறான அத்தகைய முறையில் குலுக்கப்பட்ட அல்லது இழுக்கப்பட்ட திருவுளச் சீட்டிழுப்பின் மூலம்,

தீர்மானிக்கப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட சின்ன மொன்றை,

பிரித்தொதுக்குதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய சின்னம் அவ்வவற்றுக்குரிய அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியின் அல்லது சுயேச்சைக் குழுவினான பெயருக் கெதிராக வாக்குச் சீட்டில் அச்சிடப்படுதலும் வேண்டும்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 38ஆம் பிரிவைத் திருத்துதல்.

**29.** ஆயிரத்துத்தொளாயிரத்துத் தொண்ணூறாம் ஆண்டின் 25 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 38 ஆம் பிரிவு, அப்பிரிவின் (1)ஆம் உட்பிரிவில் அவ்வுட்பிரிவின் (இ) என்னும் பந்தியை நீக்கஞ்செய்து அதற்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப் படுகின்றது :-

(இ) வாக்கெடுப்புத் தேதி ; அத்தகைய தேதி, முழு நோன்மதி நாளாக அல்லது 1971 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க, விடுமுறை நாட்கள் சட்டத்திற்கான முதலாம் அட்டவணையிற் குறித்துரைக்கப்பட்ட வாறான ஏதேனும் பொது விடுமுறை நாளாகவிராத ஒரு தேதியாக இருத்தல் வேண்டும் ; ஆனால் இயன்றவிடத்தெல்லாம், அது, ஒரு சனிக் கிழமையாக அல்லது ஆணையாளரின் ஒருப்பாட்டுடன் தெரிவத் தாட்சி அலுவலரினால் தீர்மானிக்கப்பட்ட ஒரு தேதி யாக அல்லது தேதிகளாக இருத்தல் வேண்டும் என்பதுடன், அறிவித்தல் வெளியிடப்பட்ட தேதியி லிருந்து ஐந்து வாரங்களுக்கு குறையாததும் ஆறு வாரங்களுக்கு மேற்படாததுமான தேதியொன்றாக இருத்தலும் வேண்டும் ; அத்துடன்

முதன்மைச் சட்டவாக்கத்தின் 39ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.

**30.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 39 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படு கின்றது :-

*"பெயர் நியமனத் துக்குப் பின்னர் வேட்பாளர் ஒருவர் இறத்தல்.*

*39. (1)* வாக்கெடுப்பின் நோக்கங்களுக்கு தேர்தலின் ஒத்திவைப்பிற்கும் வாக்கெடுப்பின் தொடக்கத்திற்கும் இடையில் ஏதேனும் உள்ளூர் அதிகாரசபைக்கான தேர்தலுக்குரிய வேட்பாளர் ஒருவரின் இறப்பு எவ்வாறிருப்பினும் 38 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (இ) என்னும் பந்தியின்கீழ் தேர்தலுக்கென குறித்துரைக்கப்பட்ட தேதியன்று வாக்கெடுப்பு நடைபெறுதல் வேண்டும்.

(2) வேட்பாளர் ஒருவரின் இறப்பின் காரணமாக வெற்றிடமொன்று ஏற்படுமிடத்து அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியின் செயலாளர் அல்லது சுயேச்சைக் குழுவின் குழுத் தலைவர் அல்லது இறந்த அத்தகைய வேட்பாளர் எந்த சுயேச்சைக் குழுவைச் சேர்ந்திருக்கின்றாரோ அந்த சுயேச்சைக் குழுவால் சமர்ப்பிக்கப்பட்ட பெயர் நியமனப் பத்திரத்தில் எந்த ஆளின் பெயர் இரண்டாவதாகக் காணப்படுகின்றதோ அந்த ஆள் அத்தகைய வெற்றிடத்தை நிரப்புவதற்கு இக்கட்டளைச் சட்டத்தின் 8 ஆம் பிரிவின்கீழ் உறுப்பினரொருவராகத் தேர்ந்தெடுக்கப்படுவதற்குத் தகைமைபெற்ற ஆளொருவரைப் பெயர்குறித்து நியமித்தல் வேண்டும்."

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 39அ என்னும் பிரிவைத் திருத்துதல்.*

**31.** ஆயிரத்துத்தொளாயிரத்து எழுபத்தேழாம் ஆண்டின் 24 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 39அ என்னும் பிரிவு, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் இத்தாற் பின்வருமாறு மேலும் திருத்தப்படுகின்றது:-

(1) "அப்பிரதேசத்துக்கான தேருநர் நிரலில்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "அப்பிரதேசத்தின் ஏதேனும் வட்டாரத்துக்கான தேருநர் நிரலில்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ; அத்துடன்

(2) அவ்வுட்பிரிவின் (இ) என்னும் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன் மூலமும் :-

"(இ) வட்டாரத்தின் இலக்கம் ;".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 40 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**32.** ஆயிரத்துத்தொளாயிரத்து எழுபத்தேழாம் ஆண்டின் 24 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 40 ஆம் பிரிவு, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன் மூலம் இத்தாற் பின்வருமாறு மேலும் திருத்தப்படுகின்றது :-

"(1) ஏதேனும் தேர்தற் பிரதேசத்துக்கான ஒவ்வொரு தேர்தலினதும் நோக்கத்துக்காக, அத்தேர்தல் பிரதேசத்துக்கான தெரிவத்தாட்சி அலுவலர் பின்வருவோரை நியமித்தல் வேண்டும் :-

(அ) ஒவ்வொரு வாக்கெடுப்பு மாவட்டத்திலுமுள்ள ஒவ்வொரு வாக்கெடுப்பு நிலையத்திலும் தலைமைதாங்கவென (இதனகத்துப்பின்னர் "தலைமைதாங்கும் அலுவலர்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட ஆட்கள் ; அத்துடன்

(ஆ) ஒரு வாக்கெடுப்பு நிலையம் தொடர்பில் ஒன்றுக்கு மேற்பட்ட ஆட்கள் தலைமை தாங்கும் அலுவலராக நியமிக்கப்படுமிடத்து, அவ்வாக்கெடுப்பு நிலையத்தின் சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலராகவிருப்பதற்கு அத்தகைய தலைமைதாங்கும் அலுவலர்களுள் ஒருவர்.".

**33.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 43 ஆம் பிரிவு அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில், "ஏதேனும் தேர்தற் பிரதேசத்திற்கான" என்னும் சொற்களுக்கும், "அத்தேர்தற் பிரதேசத்துக்கென அப்போதைக்கு நடைமுறையிலிருக்கும்" என்னும் சொற்களுக்கும் பதிலாக முறையே, "ஏதேனும் வட்டாரத்துக்கான" என்னும் சொற்களையும், "அத்தேர்தற் பிரதேசத்துக்கான ஏதேனும் வட்டாரத்துக்கென அப்போதைக்கு நடைமுறையிலிருக்கும்" என்னும் சொற்களையும் இடுவதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 43 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**34.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 44 ஆம் பிரிவு, அப்பிரிவின் (ஈ) என்னும் பந்தியில், "அத்தேர்தற் பிரதேசத்திற்கென" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "அவ்வட்டாரத்திற்கென" என்னும் சொல்லை இடுவதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 44 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**35.** ஆயிரத்துத்தொளாயிரத்து எண்பத்தேழாம் ஆண்டின் 24 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 45 ஆம் பிரிவு, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில், அவ்வுட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன் மூலம் இத்தால் மேலும் திருத்தப்படுகின்றது :-

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 45 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

"(ஆ) வாக்கெடுப்பு நிலையத்திற்கு வெளியே, சிங்களத்தில் அகரவரிசைப்படி ஒழுங்குபடுத்தப்பட்டதாக, ஒவ்வோர் அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியினாலும் சுயேச்சைக் குழுவினாலும் சுட்டிக்காட்டப்பட்டவாறாக வேட்பாளர்களின் பெயர்களைக் குறித்துரைக்கின்ற அறிவித்த லொன்றையும், அத்தகைய ஒவ்வொரு வேட்பாளருக்கும் குறித்தொதுக்கப்படும் அங்கீகரிக்கப்பட்ட சின்னத்தையும்.".

**36.** ஆயிரத்துத் தொளாயிரத்துத் தொண்ணூறாம் ஆண்டின் 25ஆம் இலக்கச் சட்டத்தால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 47ஆம் பிரிவு அப்பிரிவின் (அ) என்னும் பந்தியில் "வேறுபடுத்திக் காட்டும் இலக்கத்தில் தரப்பட்டுள்ள" என்பதிலிருந்து வேறுபடுத்திக் காட்டும் இலக்கத்தில் தரப்பட்டுள்ள" என்னும் சொற்கள் வரையானவற்றுக்குப் பதிலாக, "அத்தகைய குழுவின் வேறுபடுத்திக் காட்டும் இலக்கத்தில் தரப்பட்டுள்ள" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் மேலும் திருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 47 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**37.** இரண்டாயிரத்து நான்காம் ஆண்டின் 14 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 52ஆம் பிரிவு, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில், இத்தாற் பின்வருமாறு மேலும் திருத்தப்படுகின்றது :- *முதன்மைச் சட்டவாக்கத்தின் 52 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

(1) அப்பிரிவின் "முதலாவது:-" என்ற தலைப்பிடப்பட்ட பந்தியில், "இப்பொழுது நடைமுறையிலிருக்கும் தேருநர் நிரலில்'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, "இப்பொழுது நடைமுறையிலிருக்கும் இவ்வட்டாரத்துக்குரிய தேருநர் நிரலில்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ; அத்துடன்

(2) அப்பிரிவின் "இரண்டாவது :-" எனத் தலைப்பிடப்பட்ட பந்தியில், "இந்தத் தேர்தற் பிரதேசத்துக்காக உறுப்பினரொருவரை'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, "இவ்வட்டாரத்துக்கான உறுப்பினரொருவரை" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்.

**38.** இரண்டாயிரத்து நான்காமாண்டின் 14 ஆம் இலக்க சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 53அ என்னும் பிரிவு, அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியில், "தேர்தல் நடைபெறும் தேர்தற் பிரதேசத்தின் தேருநர் நிரலில்'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, "தேர்தல் நடைபெறும் வட்டாரத்தின் தேருநர் நிரலில்" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் மேலும் திருத்தப்படுகின்றது. *முதன்மைச் சட்டவாக்கத்தின் 53அ ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**39.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 59அ என்னும் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது :- *முதன்மைச் சட்டவாக்கத்தின் 59அ ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.*

*"வாக்குகளை எண்ணுதல்.*

59அ. (1) ஒவ்வொரு வாக்கெடுப்பு நிலையத்திலும் வாக்குகளை எண்ணுதலானது, அத்தகைய ஒவ்வொரு வாக்கெடுப்பு நிலையத்திலும் இடம் பெறுதல் வேண்டும்.

(2) ஒவ்வொரு வாக்கெடுப்பு நிலையத்தினதும் சிரேட்ட தலைமைதாங்கும் அலுவலர் அல்லது ஒரு தலைமைதாங்கும் அலுவலர் மட்டுமே இருக்கு

மிடத்து அத்தகைய தலைமைதாங்கும் அலுவலர், அந்நிலையத்தின் வாக்கெண்ணும் அலுவலராகப் பணியாற்றுதல் வேண்டுமென்பதுடன், அவ்வாக் கெடுப்பு நிலையத்திலுள்ள பணியாட்டொகுதி யினர், வாக்கெண்ணும் பணியாட்டொகுதியினரா கப் பணியாற்றுதலும் வேண்டும்.

(3) ஆணையாளரின் பொதுவான அல்லது விசேடமான பணிப்புகளுக்கமைய, தேர்தற் பிரதேசமொன்றின் தெரிவத்தாட்சி அலுவலர் ஒவ்வொருவரும், 40ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின்கீழ் நியமிக் கப்பட்ட சிரேட்ட தலைமைதாங்கும் அலுவலர்க ளுள் ஒருவரை அல்லது ஒரு தலைமைதாங்கும் அலுவலர் மட்டுமே நியமிக்கப்பட்டுள்ளவிடத்து அத்தகைய தலைமைதாங்கும் அலுவலரை, அத்தேர்தற் பிரதேசத்தின் ஒவ்வொரு வட்டாரத் துக்குமான பிரதான வாக்கெண்ணும் அலுவலராக விருப்பதற்கு நியமித்தல் வேண்டும். தெரிவத்தாட்சி அலுவலர், அதேநேரத்தில், விடயத்துக்கேற்ப, வாக்கெண்ணும் அலுவலரும் பிரதான வாக்கெண் ணும் அலுவலரும் தமது கடமைகளைப் புரிவதில் அவர்களுக்கு உதவுவதற்கு அவசியமானவர்க ளென அவர் கருதக்கூடியவாறான அத்தகைய எண்ணிக்கையினரான உதவியாளர்களையும் எழுதுவினைஞர்களையும் ஏனைய அலுவலர்க ளையும் நியமிக்கலாம்.”.

*முதன்மைச் சட்டவாக்கத்தில் 59ஆ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.*

**40.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 59அ என்னும் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படு கின்றதுடன், இது அச்சட்டவாக்கத்தின் 59ஆ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும் :-

“வாக்குகளை எண்ணுவதற் கான இடத்தை மாற்றுதல்.

59ஆ. (1) பிரிவு 59அ என்பதன் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், ஒரு வாக்கெடுப்பின்போது அல்லது அதன்பின்னர் ஒரு வாக்கெடுப்பு நிலையத்தில் இடம்பெற்ற எவையேனும் சம்பவங் களின் அல்லது குழப்பங்களின் விளைவாக அல்லது வேறெவையேனும் பாதுகாப்புக் காரணங்

*களுக்காக, அத்தகைய வாக்கெடுப்பு நிலையத்தின் தலைமைதாங்கும் அலுவலர், வாக்கெண்ணுதல் அவ்வாக்கெடுப்பு நிலையத்தில் இடம்பெறுதலா காதென அபிப்பிராயப்படுமிடத்து, அத்தகைய வாக்கெடுப்பு நிலையம் எந்த வட்டாரத்தில் அமைந் துள்ளதோ அந்த வட்டாரத்தில் வாக்கெடுப்பை மேற்பார்வை செய்வதற்குத் தெரிவத்தாட்சி அலுவலரினால் நியமிக்கப்பட்ட உதவித் தெரிவத் தாட்சி அலுவலருக்கு அத்தகைய நிகழ்வை அறிவித் தல் வேண்டுமென்பதுடன், அத்தகைய உதவித் தெரிவத்தாட்சி அலுவலர், அதன்பின்னர், வாக் கெண்ணுதல் எந்தப் புதிய இடத்தில் இடம்பெற வேண்டுமோ அந்தப் புதிய இடத்தைத் தீர்மானித் தலும் வேண்டும்.*

*(2) ஓராம் உட்பிரிவின்கீழ் வாக்கெண்ணும் நிலையமொன்றிற்கான இடம் மாற்றப்படும் பட்சத்தில், வாக்கெண்ணுதல் இடம்பெறவுள்ள புதிய இடம்பற்றியும் வாக்கெண்ணுதல் தொடங்கு வதற்குள்ள நேரம்பற்றியும் போதிய அறிவித்தல் உதவித் தெரிவத்தாட்சி அலுவலரினால், குறிப்பிட்ட நேரத்தில் அத்தகைய வாக்கெண்ணும் நிலையத்தில் சமூகமளித்துள்ளவர்களும் 60ஆம் பிரிவின்கீழ் நியமிக்கப்பட்டவர்களுமான வாக் கெண்ணும் முகவர்களுக்குக் கொடுக்கப்படுதல் வேண்டும்.*

*(3) உதவித் தெரிவத்தாட்சி அலுவலரினால் தீர்மானிக்கப்பட்டவாறாகப் புதிய இடத்தில் வாக் கெண்ணுதலானது, வாக்கெடுப்பு நிலையத்தின் தலைமைதாங்கும் அலுவலரினால், அவ்வாக் கெடுப்பு நிலையத்திலுள்ள பணியாட்டொகுதியி னரின் உதவியுடன் நடாத்தப்படுதல் வேண்டும்.*

*(4) புதிய இடத்தில் வாக்கெண்ணுதல் முடி வடைந்ததும், வாக்கெண்ணும் அலுவலர், தேர்தற் பிரதேசத்தின் தெரிவத்தாட்சி அலுவலருக்கு,*

*வாக்கெண்ணும் நிலையத்திற்கான மாற்றத்துக்கு ஏதுவாகவிருந்த, விடயத்துக்கேற்ப, சம்பவம், குழப்பம் அல்லது பாதுகாப்புக்காரணம் என்பன பற்றிய அறிக்கையொன்றைச் சமர்ப்பித்தல் வேண்டு மென்பதுடன், அதன் பிரதியொன்றும் ஆணையா ளரிடம் சமர்ப்பிக்கப்படுதலும் வேண்டும்.".*

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 60 ஆம், 61 ஆம் பிரிவுகளை மாற்றீடு செய்தல்.*

***41.*** *முதன்மைச் சட்டவாக்கத்தின் 60 ஆம், 61 ஆம் பிரிவுகள் இத்தால் நீக்கப்பட்டு அவற்றுக்குப் பதிலாகப் பின்வரும் பிரிவுகள் இடப்படுகின்றன :-*

*"வாக் கெண்ணும் முகவர்களை நியமித்தல்.*

*60. ஓர் அங்கீகரிக்கப்பட்ட அரசியற்கட்சியின் அதிகாரமளிக்கப்பட்ட முகவர் அல்லது சுயேச்சைக் குழுவொன்றின் குழுத்தலைவர், ஒவ்வொரு வாக்கெடுப்பு நிலையத்திலும் வாக்குகளை எண்ணும் போது வருகைதருவதற்கென (இதனகத்துப்பின்னர் "வாக்கெண்ணும் முகவர்கள்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) இரு முகவர்களை நியமிப்பதற்கு உரித்துடையவராதல் வேண்டும். அவ்வாறு நியமிக் கப்பட்ட முகவர்க ளின் பெயர்களும், முகவரிகளும், தேசிய ஆளடையாள அட்டை இலக்கங்களும், வாக் கெண்ணுதல் தொடங்கு முன்னர் வாக்கெண்ணும் அலுவலருக்கு எழுத்தில் கொடுக்கப்படுதல் வேண்டும். வாக்குகள் எண்ணப்படும் நேரத்தில், வேட்பாளரொருவர், ஒரு வாக்கெண்ணும் முகவராக மட்டுமே வாக்கெடுப்பு நிலையத்தில் இருக்கமுடியும்.*

*வாக்கெண்ணும் நேரமும் பெறுபேற்றை வெளியிடுதலும்.*

*61. (1) ஒவ்வொரு வாக்கெடுப்பு நிலையத்துக் குமான வாக்கெண்ணும் அலுவலர், வாக்கெடுப்பு முடிவடைந்தபின்னர் இயன்றவு விரைவாக, வாக்கெண்ணும் முகவர்களின் முன்னிலையில் வாக்குகளை எண்ணுவதற்கான ஒழுங்கேற்பாடு களைச் செய்தல் வேண்டும்.*

*(2) வாக்கெண்ணும் அலுவலர் வாக்கெண்ணு தலின் முடிவில் அத்தகைய வாக்கெண்ணுதலின்*

பெறுபேற்றை 59அ என்னும் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின்கீழ் வட்டாரத்திற் கென நியமிக்கப்பட்ட பிரதம வாக்கெண்ணும் அலுவலருக்கு அனுப்புதல் வேண்டும்.

(3) வாக்கெண்ணுதல் தொடங்கும் நேரமும் அத்தகைய வாக்கெண்ணுதலின் முடிவை வெளிப் படுத்துவதற்கான நேரமும் இடமும், குறிப்பிட்ட வட்டாரத்தில் போட்டியிடுகின்ற எல்லா வேட் பாளர்களுக்கும் தேர்தற் பிரதேசத்தின் தெரிவத் தாட்சி அலுவலரினால் எழுத்தில் அறிவிக்கப்படு தல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 63 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**42.** ஆயிரத்துத் தொளாயிரத்து எண்பத்தேழாம் ஆண்டின் 24 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 63ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு மேலும் திருத்தப்படுகின்றது :-

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் -

(அ) அவ்வுட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியை நீக்கி விட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன் மூலமும் :-

"(ஆ) அதன்மீது ஒன்றுக்கு மேற்பட்ட அங்கீ கரிக்கப்பட்ட அரசியற்கட்சிக்கு அல்லது சுயேச்சைக்குழுவுக்கு வாக்குகள் குறியிடப் படுகின்ற ;" ;

(ஆ) அவ்வுட்பிரிவின் (ஈ) என்னும் பந்தியை நீக்கி விட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன் மூலமும் :-

"(ஈ) குறியீடு செய்யப்படாததாகவுள்ள அல் லது எந்த அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சிக்கு அல்லது சுயேச்சைக்குழுவுக்கு வாக்கு குறியிடப்படுகின்றது என்பது பற்றிய நிச்சயமின்மைக்காக வறிதாக வுள்ள ;";

(2) அப்பிரிவின் (4) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின் வரும் புதிய உட்பிரிவை உட்புகுத்துவதன் மூலமும் :-

"(4அ) வாக்கெண்ணும் அலுவலரொருவர், வாக் கெண்ணுதல் நடைபெறும் நேரத்தின்போது சமுகமா யிருக்கின்ற முகவரொருவரினால் அதற்கெனச் செய்யப் படும் விண்ணப்பத்தின்மேல், (1) ஆம் உட்பிரிவின்கீழ் நிராகரிக்கப்படாத வாக்குச்சீட்டுகளின் மீள் எண்ணல் ஒன்றை நடாத்தலாம் ; எவ்வாறாயினும், ஒரு வேட்பாள ரினால் அல்லது அவரது முகவரினால் செய்யப்பட்ட ஏதேனும் விண்ணப்பத்தின்மீது அவ்வாறு நடாத்தப்பட வேண்டிய மீள் எண்ணல்களின் ஆகக்கூடிய எண் ணிக்கை, இரண்டை விஞ்சுதலாகாது.";

(3) அப்பிரிவின் (6) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன் மூலமும் :-

"(6) வாக்கெண்ணும் அலுவலர், ஒவ்வொரு அங்கீ கரிக்கப்பட்ட அரசியற் கட்சிக்கும் அல்லது சுயேச்சைக் குழுவுக்கும் அளிக்கப்பட்ட வாக்குகளின் எண்ணிக்கை பற்றிய எழுத்திலான கூற்றொன்றைச் சொற்களிலும் எண்களிலும் தயாரித்தல் வேண்டும். அவ்வாறு தயா ரிக்கப்பட்ட கூற்று, வாக்கெண்ணும் அலுவலரினால் அத்தாட்சிப்படுத்தப்படுதலும், அவரது எழுதுவினை ஞர்களுள் ஒருவரினாலும், சமுகமாயிருப்போரும் கையொப்பமிட விரும்புவோருமான வாக்கெண்ணும் முகவர்களினாலும் சாட்சிப்படுத்தப்படுதலும் வேண்டும்."; அத்துடன்

(4) அப்பிரிவின் உட்பிரிவுகள் (6அ), (6இ) மற்றும் (7) என்பவற்றை நீக்கிவிடுவதன்மூலமும்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 64 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**43.** ஆயிரத்துத் தொளாயிரத்து எண்பத்தேழாம் ஆண்டின் 24 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 64 ஆம் பிரிவு, அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன் மூலம் இத்தால் மேலும் திருத்தப்படுகின்றது :-

"(2) வாக்கெண்ணும் அலுவலர் ஒவ்வொருவரும், 59அ என்னும் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின்கீழ் நியமிக்கப் பட்டவரும், வட்டாரத்துக்குப் பொறுப்பாகவுள்ளவருமான பிரதான வாக்கெண்ணும் அலுவலரிடம், (1)ஆம் உட்பிரிவிற் குறிப்பீடு செய்யப்பட்ட இலச்சினையிடப்பட்ட பொதிகளுடன் சேர்த்து, பயன்படுத்தப்படா வாக்குச் சீட்டுகள், பழுதடைந்த வாக்குச் சீட்டுகள், அளிக்கப்பட்ட வாக்குச் சீட்டுகள், தேருநர் நிரலின் அடையாளமிடப்பட்ட பிரதிகள், வழங்கப்பட்ட வாக்குச்சீட்டு களின் அடியிதழ்கள், அளிக்கப்பட்ட வாக்குகள் நிரல், 53அ என்னும் பிரிவின்கீழ் எந்த வாக்காளர்களுக்கு வாக்குச்சீட்டுகள் வழங்கப்பட வில்லையோ அந்த வாக்காளர்கள் பற்றிய நிரல், வாக்குச் சீட்டுக் கணக்கு, ஒவ்வொரு அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியின் அல்லது சுயேச்சைக் குழுவின் வேட்பாளர் களுக்கும் அளிக்கப்பட்ட வாக்குகளின் எண்ணிக்கை பற்றிய எழுத்திலான கூற்று மற்றும் 62 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின்கீழ் வாக்கு களை எண்ணுதல் பற்றிய பதிவேடு என்பவற்றைக் கொண்டுள்ள பொதிகளையும் ஒப்படைத் தல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 65 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.

**44.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 65 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படு கின்றது :-

"ஆகக் கூடுதலான வாக்குகளைப் பெறுகின்ற வேட்பாளரை உறுப்பின ரொருவராக வெளிப் படுத்துதல்.

65. (1) அறுபத்திநான்காம் பிரிவிற் குறிப்பீடு செய்யப்பட்ட ஆவணங்களைப் பெற்றதன்மேல், 59அ என்னும் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட வட்டாரத்துக்குப் பொறுப்பாக வுள்ள பிரதான வாக்கெண்ணும் அலுவலர், அவ் வட்டாரத்தில் ஆகக் கூடிய எண்ணிக்கையான வாக்குகளைப் பெற்ற அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியை அல்லது சுயேச்சைக் குழுவைச் சேர்ந்த வரும் அந்த வட்டாரத்திற்கு அதன் வேட்பாளராக அதன் நியமனப்பத்திரத்தில் அத்தகைய அங்கீகரிக் கப்பட்ட அரசியற் கட்சியால் அல்லது சுயேச்சைக் குழுவால் பெயர் குறித்து நியமிக்கப்பட்டவருமான வேட்பாளரின் பெயரை, அவ்வட்டாரத்துக்கான உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டவராக

வெளிப்படுத்துதல் வேண் டும். அவ்வட் டாரத்தில் தேர்தலில் போட்டியிட்ட மற்றெல்லா அங்கீகரிக் கப்பட்ட அரசியற் கட்சிகளாலும் சுயேச்சைக் குழுக்க ளாலும் பெறப்பட்ட வாக்குகளின் எண்ணிக்கையை யும் அவர் வெளிப்படுத்துதல் வேண்டும்.

(2) அங்கீகரிக்கப்பட்ட அரசியற்கட்சியொன்றில் எவரேனும் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட வேட்பாளர்களிடையே அல்லது இரண்டோ அல்லது அதற்கு மேற்பட்ட அத்தகைய கட்சிகளுக்கு அல்லது குழுக்களிடையே அல்லது சுயேச்சைக் குழுவொன்றின் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட வேட்பாளர்களிடையே வாக்குகள் சமமாகவுள்ளனவெனக் காணப்படுமிடத்தும், ஒரு வாக்கைச் சேர்த்தலானது அத்தகைய ஓர் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியின் அல்லது சுயேச்சைக் குழுவின் பெயர்குறித்த வேட்பாளர் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு அவரை உரித்துடைய தாக்குமிடத்து, அத்தகைய ஒரு மேலதிக வாக்கு எந்த அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சிக்கு அல்லது சுயேச்சைக் குழுவுக்கு அளிக்கப்பட்டுள்ள தென கருதப்படுதல் வேண்டும் என்பதனைத் தீர்மானித்தலானது, பிரதான வாக்கெண்ணும் அலுவலரின் முன்னிலையில், அவர் தீர்மானிக்க வேண்டியவாறான அத்தகைய முறையில், திருவுளச் சீட்டிழுப்பின் மூலம் செய்யப்படுதல் வேண்டும்.

(3) ஓராம் உட்பிரிவின்கீழ் வட்டாரமொன்றின் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்படும் வேட்பா ளரை வெளிப்படுத்துவதன்மேல், சம்பந்தப்பட்ட பிரதான வாக்கெண்ணும் அலுவலர், அவரது உடைமையிலுள்ள, 64 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவிற் குறிப்பீடு செய்யப்பட்ட எல்லா ஆவ ணங்களையும் தெரிவத்தாட்சி அலுவலரிடம் ஒப்ப டைத்தல் வேண்டும்.”.

**45.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 65அ என்னும் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப் படுகின்றது :-

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 65அ என்னும் பிரிவை மாற்றீடு செய்தல்.*

*"பல்லுறுப்பினர் வட்டார மொன்றுக்குத் தேர்நதெடுக் கப்படவுள்ள உறுப்பினர் களை வெளிப்படுத்து தல்.*

65அ. (1) பல்லுறுப்பினர் வட்டாரமொன்றின் விடயத்தில் அந்த வட்டாரத்தின் தேர்ந்தெடுக் கப்பட்ட உறுப்பினர்களாக வெளிப்படுத்தப்பட வுள்ள வேட்டபாளர்கள் அத்தகைய வட்டாரத்தில் தேர்தலில் போட்டியிட்ட அங்கீகரிக்கப்பட்ட அரசியற்கட்சி ஒவ்வொன்றினாலும் அத்துடன் சுயேச்சைக்குழு ஒவ்வொன்றினாலும் பெறப்பட்ட வாக்குகளின் எண்ணிக்கையின் அடிப்படையிலிருத் தல் வேண்டும் என்பதுடன் விடயத்திற்கேற்ப ஆகக் கூடுதலான எண்ணிக்கையிலான வாக்குகளைப் பெற்ற அங்கீகரிக்கப்பட்ட அரசியற்கட்சியின் அல்லது சுயேச்சைக் குழுவின் வேட்பாளர் அவ் வட்டாரத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர் ஒருவராக முதலில் வெளிப்படுத்தப்படுதலும் அவ் வட்டாரத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர் களாகத் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் எனத் தேவைப்படுத்தப்பட்ட எஞ்சிய எண்ணிக்கையின ரான உறுப்பினர்கள் அதற்கிணங்க வெளிப் படுத்தப்படுதலும் வேண்டும்.

(2) எத்தன்மையதுமான ஏதேனும் காரணத்திற் காக ஏதேனும் பல்லுறுப்பினர் வட்டாரத்தில் தேர்தலொன்றில் ஒரேயொரு அங்கீகரிக்கப்பட்ட அரசியற்கட்சி அல்லது சுயேச்சைக்குழு போட்டி யிட்டிருப்பின் அத்தகைய பல்லுறுப்பினர் வட்டா ரத்தில் உறுப்பினர்களாகத் தேர்நதெடுக்கப்பட வேண்டிய வேட்பாளர்கள் அவ்விடயத்திற்கேற்ப அங்கீகரிக்கப்பட்ட அரசியற்கட்சியால் அல்லது சுயேச்சைக்குழுவால் சமர்ப்பிக்கப்பட்ட பெயர் நியமனப்பத்திரத்தில் உள்ளடக்கப்பட்ட மேலதிக ஆட்களின் நிரலில் எந்த ஆட்களின் பெயர்கள் காணப்படுகின்றனவோ அந்த ஆட்களிடையே யிருந்து விடயத்திற்கேற்ப அத்தகைய அங்கீ கரிக்கப்பட்ட அரசியற்கட்சியின் செயலாளரால் அல்லது சுயேச்சைக்குழுவின் தலைவரால் பெயர்குறித்து நியமிக்கப்படுதல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தில் 65ஆ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.

**46.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 65அ என்னும் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு உட்புகுத்தப்படுகின்றது என்பதுடன், அது முதன்மைச் சட்டவாக்கத்தின் 65ஆ என்னும் பிரிவு என்றாற்போன்று பயனுறுதலும் வேண்டும் :-

பிரதிநிதித்துவப்படுத்தப்படாத வாக்காளர்களைப் பிரதிநிதித்துவப்படுத்துவதற்கு உரித்துடைய வேட்பாளர்கள்.

65அ. (1) தேர்தற் பிரதேசத்தின் எல்லா வட்டாரங்களுக்கும், அவர்களின் சார்பாக அளிக்கப்பட்ட வாக்குச் சீட்டுகளுக்கிணங்கத் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களின் எண்ணிக்கை பற்றி 65 ஆம் பிரிவின்கீழான வெளிப்படுத்துகையின்மேல், விடயத்துக்கேற்ப, மாநகரசபைகள் கட்டளைச் சட்டத்தின் 5 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின்கீழ் அல்லது 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, பிரதேச சபைகள் சட்டத்தின் 4 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின்கீழ் தெரிவுசெய்யப்படுவதற்குரிய அவ்வுள்ளூர் அதிகாரசபைக்கான உறுப்பினர்களின் எண்ணிக்கை, இப்பிரிவில் இதனகத்துப்பின்னர் ஏற்பாடு செய்யப்பட்ட முறையில் பங்கிடப்படுதல் வேண்டும்.

(2) ஒவ்வொரு அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியினதும் சுயேச்சைக் குழுவினதும் எல்லா வேட்பாளர்களாலும் பெற்றுக்கொள்ளப்பட்ட வாக்குகளின் எண்ணிக்கையானது -

(அ) அறுபத்தைந்தாம் பிரிவின்கீழ் ஒவ்வொரு வட்டாரத்தினதும் உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டதாக வெளிப்படுத்தப்பட்ட வேட்பாளர்களால் ; அத்துடன்

(ஆ) அத்தகைய உறுப்பினர் போட்டியிட்ட வட்டாரத்தில் பெறப்பட்ட செல்லுபடியான வாக்குகளின் மொத்த எண்ணிக்கையின் இருபதிலொன்றுக்குக் குறைவான வாக்குகளைப் பெற்ற ஒவ்வொரு அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியினதும் சுயேச்சைக் குழுவினதும் வேட்பாளர்களால்,

(இதனகத்துப்பின்னர் இப்பிரிவில் ''மீதி வேட்பாளர்கள்'' எனக் குறிப்பீடு செய்யப்படுவர்) பெறப்பட்ட வாக்குகள் புறநீங்கலாக அப்போது சேர்க்கப்பட்டு உள்ளூர் அதிகாரசபையின் பல்வேறு வட்டாரங்களுக்கும் தேர்ந்தெடுக்கப்பட்ட எல்லா வேட்பாளர்களாலும் பெறப்பட்ட செல்லுபடியான மொத்த வாக்குகளின் கூட்டுமொத்தத்தின் நூற்றுவீதம் எஞ்சிய வேட்பாளர்களால் பெறப்பட்ட வாக்குகளுடன் சேர்த்து (1) ஆம் உட்பிரிவின் நியதிகளின்படி தெரிவுசெய்யப்படவேண்டிய உறுப்பினர்களின் எண்ணிக்கையைத் தீர்மானிப்பதற்கான மூலப்பிரமாணமாதல் வேண்டும்.

(3) ஓராம் உட்பிரிவின் நியதிகளின்படி தெரிவுசெய்யப்பட வேண்டிய உறுப்பினர்களின் எண்ணிக்கையானது (3) ஆம் உட்பிரிவின்கீழ் தீர்மானிக்கப்பட்ட நூற்றுவீதம் –

(அ) முப்பத்துமூன்று நூற்றுவீதத்தை விஞ்சுமிடத்து அந்த உள்ளூர் அதிகாரசபையின் எல்லா வட்டாரங்களுக்கும் தேர்ந்தெடுக்கப்படவுள்ள உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கையின் முப்பத்து மூன்றொடு மூன்றிலொரு சதவீதமாதல் வேண்டும் ; அல்லது

(ஆ) முப்பத்துமூன்று சதவீதத்திற்கும் குறைவாயிருக்குமிடத்து இப்பிரிவின்கீழ் இடப்பரப்பின் அந்த உள்ளூர் அதிகாரசபையின் எல்லா வட்டாரங்களுக்கும் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களின் எண்ணிக்கையின் அந்த நூற்றுவீதத்திற்குச் சமமானதாயிருத்தல் வேண்டும்.

(4) மூன்றாம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்படும் முப்பத்துமூன்று சதவீதத்தை அமைக்கின்ற எண்ணிக்கை முழு எண்ணாகவும் பின்னமாகவும் இருக்கின்றவிடத்து, முழு எண்ணானது அவ்வுட்பிரிவின் நோக்கங்களுக்காக அத்தகைய முப்பத்து மூன்றொடு மூன்றிலொரு சதவீதத்தை அமைக்க வேண்டியதான எண்ணிக்கையாக இருப்பதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(5) மூன்றாம் உட்பிரிவின்கீழ் தீர்மானிக்கப்பட்ட வாறு தெரிவுசெய்யப்படுவதற்கு உரித்துடைய உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கை எஞ்சிய வேட்பாளர்களினால் பெறப்பட்ட செல்லுபடியான மொத்த வாக்குகளின் கூட்டுமொத்தத்தை அவ்வுட் பிரிவின்கீழ் தீர்மானிக்கப்பட்டவாறு தெரிவுசெய் யப்படுவதற்கு உரித்துடைய உறுப்பினர்களின் எண்ணிக்கையால் பிரிப்பதன்மூலம் அத்தேர்த லில் போட்டியிட்ட அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சிகளுக்கும் சுயேச்சைக் குழுக்களுக்குமிடையே வகுத்துக் கொடுக்கப்படுதல் வேண்டும். அத்தகைய பிரிவிடுதலால் விளையும் எண்ணிக்கை (ஏதேனும் பின்னம் கணக்கிற் கொள்ளப்படமாட்டாது). இதனகத்துப்பின்னர் இப்பிரிவில், "தகைமையளிக் கும் எண்" எனக் குறிப்பீடு செய்யப்படும்.

(6) ஒவ்வொரு அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியினதும் சுயேச்சைக் குழுவினதும் எஞ்சிய வேட்பாளர்களால் பெறப்பட்ட வாக்குகளின் கூட்டுமொத்தம் விடயத்திற்கேற்ப அத்தகைய அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியால் அல்லது சுயேச்சைக் குழுவால் அந்த உள்ளூர் அதிகார சபையின் உறுப்பினர்களால் தெரிவு செய்யப்படு வதற்கு உரித்துடைய ஆட்களின் எண்ணிக்கையை ஆய்ந்தறிவதற்கு அப்போது தகைமையளிக்கும் எண்ணால் பிரிக்கப்படுதல் வேண்டும். இந்த முறையால் ஆய்ந்தறியப்பட்ட எண் முழு எண் ஒன்றாகவும் பின்னமொன்றாகவும் இருக்குமிடத்து முழு எண் இவ்வுட்பிரிவின் நோக்கத்திற்கான எண்ணாகக் கருதப்படுதல் வேண்டும்.

(7) ஐந்தாம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்ட முறையில் ஏதேனும் அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியால் அல்லது சுயேச்சைக் குழுவால் தெரிவு செய்யப்பட வேண்டிய உறுப்பினர்களின் எண்ணிக்கையை ஆய்ந்தறிதலின் முடிவில் (3) ஆம் உட்பிரிவின்கீழ் தீர்மானிக்கப்பட்டவாறு தெரிவு செய்யப்பட வேண்டிய உறுப்பினர்களின் மேலும்

ஏதேனும் எண் எஞ்சியிருப்பின் (6) ஆம் உட்பிரிவின்கீழ் ஆய்ந்தறியப்பட்டவாறு ஒவ்வொரு அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியாலும் அல்லது சுயேச்சைக் குழுவாலும் பெறப்பட்ட ஆகக்கூடுதலான பின்னத்தின் அடிப்படையில் பிரித்தொதுக்கப்படுதல் வேண்டும்.

(8) உதவித் தெரிவத்தாட்சி அலுவலர், விடயத்திற்கேற்ப, அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சி அல்லது சுயேச்சைக்குழு எந்த எண்ணிக்கையினரான உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்கு உரித்துடையதாகின்றதோ அந்த எண்ணிக்கையினரான உறுப்பினர்களை (5) ஆம் உட்பிரிவின்கீழ் ஆய்ந்தறியப்பட்டவாறு உறுப்பினரொருவரைத் தெரிவுசெய்வதற்கு உரித்துடைய, விடயத்திற்கேற்ப அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியின் செயலாளருக்கு அல்லது சுயேச்சைக் குழுவின் தலைவருக்கு அறிவித்தல் வேண்டும் என்பதுடன் அவ்வுட்பிரிவின்கீழ் தெரிவுசெய்யப்படவேண்டிய ஆட்களின் பெயர்களை விடயத்திற்கேற்ப மாநகரசபைகள் கட்டளைச் சட்டத்தின் 5 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின்கீழ் அல்லது நகரசபைகள் கட்டளைச் சட்டத்தின் 5 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின்கீழ் அல்லது 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, பிரதேச சபைச் சட்டத்தின் 4 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின்கீழ் நியமனப் பத்திரத்தில் எந்த ஆட்களின் பெயர்கள் உள்ளடக்கப்பட்டனவோ அந்த ஆட்களிடையேயிருந்து பெயர்குறித்து நியமிக்குமாறு விடயத்திற்கேற்ப அத்தகைய செயலாளருக்கு அல்லது தலைவருக்கு வேண்டுகோள் விடுத்தல் வேண்டும்.

(9) வேட்பாளர்களின் பெயர்கள் அதன் பின்னர் அந்தந்த தேர்தல் பிரதேசத்தின் உதவித் தெரிவத்தாட்சி அலுவலருக்கு வெளிப்படுத்தப்படுதல் வேண்டும்.

**47.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 66ஆம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது:-

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 66ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.*

"முடிவை வெளியிடுதல்.

66. (1) ஓர் உள்ளூர் அதிகாரசபை தொடர்பில் 65ஆம் பிரிவின்கீழ் ஒவ்வொரு வட்டாரத்துக்குமான உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட வேட்பாளர்களையும் கட்டளைச்சட்டத்தின் 65அ என்னும் பிரிவின்கீழ் தெரிவு செய்யப்பட்ட அவ் வேட்பாளர்களையும் வெளிப்படுத்துவதன்மேல், அத்தகைய உள்ளூர் அதிகாரசபையின் தேர்தற் பிரதேசத்தின் உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்:-

(அ) அவ்வுள்ளூர் அதிகாரசபையின் உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட அல்லது தெரிவுசெய்யப்பட்ட எல்லா வேட்பாளர்களினதும் பெயர்களைக் குறித்துரைக்கின்ற அறிவித்தலொன்றை வெளியிடுதல் வேண்டும் ; அத்துடன்

(ஆ) அத்தேர்தற் பிரதேசம் எந்த மாவட்டத்தில் அமைந்துள்ளதோ அந்த மாவட்டத்தின் தேர்தல்கள் அலுவலர் மூலம் ஆணையாளருக்கு முடிவை அறிக்கையிடுதல் வேண்டும்.

(2) முடிவுபற்றிய அறிக்கை கிடைக்கப்பெற்றதன் மேல், ஆணையாளர், அவ்வுள்ளூர் அதிகாரசபையின் உறுப்பினர்களாகவிருப்பதற்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட வேட்பாளரின் பெயர்களை வர்த்தமானியில் வெளியிடுவித்தல் வேண்டும்.".

**48.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 66ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவுகள் இத்தால் உட்புகுத்தப்படுகின்றனவென்பதுடன், இவை அச்சட்டவாக்கத்தின் 66அ, 66ஆ, 66இ, 66ஈ, 66உ, 66ஊ மற்றும் 66எ என்னும் பிரிவுகளாகப் பயனுடையனவாதலும் வேண்டும்:-

*முதன்மைச் சட்டவாக்கத்தில் 66அ, 66ஆ, 66இ, 66ஈ. 66உ, 66ஊ மற்றும் 66எ என்னும் புதிய பிரிவுகளை உட்புகுத்துதல்.*

"உள்ளூர் அதிகாரசபைகளிலுள்ள வெற்றிடங்களை நிரப்புதல்.

66அ. (1) ஓர் உள்ளூர் அதிகாரசபையின் உறுப்பினரொருவரது பதவி, விடயத்துக்கேற்ப, மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின், நகரசபைகள் கட்டளைச் சட்டத்தின் அல்லது 1987ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க, பிரதேச சபைகள் சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் வெற்றிடமானதாகுமிடத்து, அத்தகைய உள்ளூர் அதிகாரசபை எந்தத் தேர்தற்

பிரதேசத்தில் அமைந்துள்ளதோ அந்தத் தேர்தற் பிரதேசத்துக்காக நியமிக்கப்பட்ட தெரிவத்தாட்சி அலுவலர், அத்தகைய வெற்றிடமானது–

(அ) அந்தத் தேர்தல் இடப்பரப்பிலுள்ள ஏதேனும் வட்டாரத்திற்கு வாக்குச்சீட்டின் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர் ஒருவர் தொடர்பிலானதாகவிருக்குமிடத்து, எந்த வட்டாரத்தில் வெற்றிடம் ஏற்பட்டதோ அந்த வட்டாரத்தில் வெற்றிடத்தை நிரப்புவதற்கு இக்கட்டளைச் சட்டத்தின் 8ஆம் பிரிவின்கீழ் உள்ளூர் அதிகாரசபையொன்றின் உறுப்பினரொருவராகத் தேர்ந்தெடுக்கப்படுவதற்குத் தகைமைபெற்ற வேறு எவரேனும் ஆளைப் பெயர்குறித்து நியமிக்குமாறு விடயத்திற்கேற்ப எந்த அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியை அல்லது சுயேச்சைக் குழுவை அத்தகைய உறுப்பினர் சேர்ந்திருக்கின்றாரோ அந்த அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியின் செயலாளருக்கு அல்லது சுயேச்சைக் குழுத் தலைவருக்கு வேண்டுகோள் விடுத்தல் வேண்டும் ; அல்லது

(ஆ) இக்கட்டளைச் சட்டத்தின் 65அ என்னும் பிரிவின்கீழ் தெரிவுசெய்யப்பட்ட உறுப்பினரொருவர் தொடர்பிலானதாகவிருக்குமிடத்து, அப்போது எந்த வேட்பாளரின் பதவி வறிதாக வந்துள்ளதோ அந்த வேட்பாளர் ஓர் அங்கீகரிக்கப்பட்ட அரசியற்கட்சியைச் சேர்ந்தவராக அல்லது சுயேச்சைக் குழுவின் வேட்பாளராக இருக்கின்றாரோவென்பதைப் பொறுத்து விடயத்துக்கேற்ப மாநகரசபைகள் கட்ட ளைச் சட்டத்தின் 5ஆம் பிரிவின் (1)ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின்கீழ், நகரசபைக் கட்டளைச்சட்டத்தின் 5ஆம் பிரிவின் (1)ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின்கீழ் அல்லது 1987ஆம்

ஆண்டின் 15ஆம் இலக்க, பிரதேசச் சபைச் சட்டத்தின் 4ஆம் பிரிவின் (1)ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின்கீழ் அத்தகைய அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியால் அல்லது சுயேச்சைக் குழுவால் பெயர் குறித்து நியமிக்கப்பட்ட ஆட்களிடையேயிருந்து அத்தகைய வெற்றிடத்தை நிரப்புவதற்கு ஆளொருவரை நியமிக்குமாறு விடயத்திற்கேற்ப அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியின் செயலாளருக்கு அல்லது சுயேட்சைக் குழுத் தலைவருக்கு வேண்டுகோள் விடுத்தல் வேண்டும். எந்த ஆளும் பெயர் குறித்து நியமிக்கப்படாதுள்ளவிடத்து, தெரிவத்தாட்சி அலுவலர் விடயத்திற்கேற்ப அங்கீகரிக்கப்பட்ட அரசியற்கட்சியின் செயலாளரை அல்லது சுயேச்சைக் குழுவின் தலைவரை அத்தகைய வெற்றிடத்தை நிரப்புவதற்கு இக்கட்டளைச்சட்டத்தின் 8 ஆம் பிரிவின் நியதிகளின்படி உறுப்பினரொருவராகவிருக்கத் தகைமையுடைய ஆளொருவரை பெயர்குறித்து நியமிக்கும்படி வேண்டுகோள் விடுத்தல் வேண்டும்.

(2) ஒராம் உட்பிரிவின்கீழ் உள்ளூர் அதிகாரசபையொன்றின் எவரேனும் உறுப்பினரின் வெற்றிடத்தை நிரப்புவதற்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட வேட்பாளர் அவர் எந்த உறுப்பினரைப் பின்னுறுகின்றாரோ அந்த உறுப்பினரின் முடிவுறாதெஞ்சியுள்ள காலப்பகுதிக்குப் பதவி வகித்தல் வேண்டும்.

*அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியொன்று அல்லது சுயேச்சைக் குழுவொன்று ஐம்பது சதவீதத்திற்கும் அதிகமான*

66ஆ. (1) ஏதேனும் அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சி அல்லது சுயேச்சைக்குழு உள்ளூர் அதிகாரசபையொன்றின் ஆசனங்களின் மொத்த எண்ணிக்கையில் ஐம்பது சதவீதத்தை அல்லது அதனிலும் கூடுதலாகப் பெற்றுள்ளவிடத்து ஆணையாளர், உள்ளூர் அதிகாரசபையின் உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களின் பெயர்கள் 66ஆம் பிரிவின் (2)ஆம்

வாக்குகளைப் பெறுமிடத்து மாநகர முதல்வரை வெளிப் படுத்துதல்.

உட்பிரிவின்கீழ் ஆணையாளரால் வெளியிடப்பட்ட தன்மீது விடயத்திற்கேற்ப அத்தகைய அங்கீகரிக்கப் பட்ட அரசியற் கட்சியை அல்லது சுயேச்சைக் குழுவைச் சேர்ந்த உறுப்பினர்களிடையேயிருந்து அத்தகைய உள்ளூர் அதிகாரசபையின் மாநகர முதல்வராகவும் பிரதி மாநகர முதல்வராகவும் யார் தேர்ந்தெடுக்கப்பட்டதாக வெளிப்படுத்தப்பட வேண்டும் எனத் தீர்மானிக்குமாறு விடயத்திற் கேற்ப அத்தகைய அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியின் செயலாளருக்கு அல்லது சுயேச்சைக் குழுத்தலைவருக்கு அழைப்பு விடுத்தல் வேண்டும்.

(2) இப்பிரிவின் (1)ஆம் உட்பிரிவின்கீழ் தீர்மானிக்கப்பட்டவாறு மாநகர முதல்வரின் அல்லது பிரதி மாநகர முதல்வரின் பதவி அத்தகைய உள்ளூர் அதிகாரசபையின் பதவிக் காலத்தின்போது வெற்றிடமானதாகுமிடத்து ஆணையாளர் இப்பிரிவின் (3)ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய விடயத்துக்கேற்ப அத்தகைய அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியை அல்லது சுயேச்சைக் குழுவைச் சேர்ந்தவர்களான அந்த உள்ளூர் அதிகாரசபையின் உறுப்பினர்களிடையேயிருந்து உள்ளூர் அதிகாரசபையின் புதிய மாநகர முதல்வராக அல்லது பிரதி மாநகர முதல்வராக உறுப்பினர் யார் வரவேண்டும் என்பதனை உடனடியாகத் தீர்மானிக்குமாறு அத்தகைய மாநகர முதல்வர் அல்லது பிரதி மாநகர முதல்வர் விடயத்திற் கேற்ப எந்த அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியை அல்லது சுயேச்சைக் குழுவைச் சேர்ந்திருந்தாரோ அந்த அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியின் செயலாளருக்கு அல்லது சுயேச்சைக் குழுத்தலைவருக்கு அழைப்பு விடுத்தல் வேண்டுமென்பதுடன் ஆணையாளருக்கு அதனை

அறிவித்தலும் வேண்டும். அத்தகைய தீர்மானம் கிடைக்கப்பெற்றதன்மீது ஆணையாளர் அத்தகைய தீர்மானத்தில் பெயர்குறிப்பிடப்பட்டுள்ள உறுப்பினரை அந்த உள்ளூர் அதிகாரசபையின் விடயத்திற்கேற்ப புதிய மாநகர முதல்வராக அல்லது பிரதி மாநகர முதல்வராக வெளிப்படுத்துதல் வேண்டும்.

(3) இப்பிரிவின் (2)ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், விடயத்திற்கேற்ப மாநகர முதல்வர் மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 215அ என்னும் பிரிவின்கீழ் அல்லது நகரசபைகள் கட்டளைச் சட்டத்தின் 178அ என்னும் பிரிவின் கீழ் அல்லது 1987ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க, பிரதேசசபைச் சட்டத்தின் 169ஆம் பிரிவின்கீழ் அவரது பதவியை விட்டு விலகியுள்ளதாகக் கருதப்படுவதன் விளைவாக அத்தகைய மாநகர முதல்வரின் பதவியில் வெற்றிடமொன்று ஏற்படுமிடத்தும் அத்தகைய வெற்றிடம் அவ்வுட்பிரிவில் குறித்துரைக்கப்பட்ட நடவடிக்கை முறைக்கிணங்க நிரப்பப்படுமிடத்து, அத்தகைய வெற்றிடத்தை நிரப்புவதற்கு அவ்வாறு நியமிக்கப்பட்ட உறுப்பினரே அதன்பின்னர் மேலே குறிப்பீடு செய்யப்பட்ட பிரிவுகளின்கீழ் மாநகர முதல்வராக அவரது பதவியை விட்டு விலகுமிடத்தும் அவ்வாறு உருவாக்கப்பட்ட வெற்றிடம் இப்பிரிவின் (2)ஆம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்ட நடவடிக்கையைப் பின்பற்றி நிரப்பப்படுதலாகாது. அத்தகைய விடயத்தில் எந்த உள்ளூர் அதிகார சபையில் மாநகர முதல்வர் பதவியிலான வெற்றிடம் இரண்டாம் தடவையாக ஏற்பட்டுள்ளதோ அந்த உள்ளூர் அதிகாரசபை கலைக்கப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன் அமைச்சர் சம்பந்தப்பட்ட உள்ளூர் அதிகாரசபைக்கு

ஆணையாளர் ஒருவரை நியமித்தல் வேண்டும். இவர் ஆணையாளர் ஒருவராக அத்தகைய உள்ளூர் அதிகாரசபையின் உறுப்பினர்களின் எஞ்சியுள்ள பதவிக்காலத்தின் மீதிக்காலப் பகுதிக்குப் பதவிவகித்தல் வேண்டும்.

*உள்ளூர் அதிகார சபையின் முதலாவது கூட்டம்.*

66இ. (1) உள்ளூர் அதிகாரசபையின் ஏதேனும் அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சி அல்லது சுயேச்சைக் குழு அத்தகைய உள்ளூர் அதிகாரசபையின் ஆசனங்களின் மொத்த எண்ணிக்கையின் ஐம்பது சதவீதத்திற்கும் குறைவாகப் பெற்றிருக்குமிடத்து மாநகர முதல்வரும் பிரதி மாநகர முதல்வரும் அத்தகைய உள்ளூர் அதிகாரசபையின் முதலாவது கூட்டத்தில் தெரிவுசெய்யப்படுதல் வேண்டும்.

(2) சபையின் முதலாவது கூட்டம் 66ஆம் பிரிவின் (2)ஆம் உட்பிரிவின்கீழ் ஆணையாளரால் ஏதேனும் உள்ளூர் அதிகார சபையின் உறுப்பினர்களாக தேர்ந்தெடுத்து தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களின் பெயர்கள் வெளியிடப்பட்ட ஒரு வாரத்திற்குள் உள்ளூராட்சி ஆணையாளரால் அதன் பொருட்டு வெளியிடப்பட்ட அறிவித்தல் மூலம் கூட்டப்படுதல் வேண்டும். அத்தகைய அறிவித்தல் கூட்டத்திற்கென நியமிக்கப்பட்ட தேதிக்கு முன்னர் ஏழு நாட்களுக்குக் குறையாமல் வழங்கப்படுதல் வேண்டும் என்பதுடன் :-

(அ) வர்த்தமானியிலும் மூன்று மொழிகளிலும் ஒவ்வொன்றும் ஒரு செய்தித்தாளிலும் வெளியிடப்படுதலும் வேண்டும்; அத்துடன்

(ஆ) அச்சபையின் உறுப்பினர்கள் ஒவ்வொருவருக்கும் பதிவுத் தபாலில் அனுப்பப்படுதலும் வேண்டும்.

(3) ஓராம் உட்பிரிவின்கீழ் வெளியிடப்படும் அறிவித்தல் ஒவ்வொன்றும் முதலாவது கூட்டத்தின் தேதியையும் நேரத்தையும் இடத்தையும் குறித்துரைத்தல் வேண்டும் என்பதுடன் அவ்வாறு குறித்துரைக்கப்பட்ட தேதி சபையின் தவணையின் தொடக்கத்திற்கென நியமிக்கப்பட்ட தேதியை யடுத்து அடுத்துறும் தேதிக்கு ஒரு மாதத்திற்குட்பட்ட தேதியாக அல்லது காலம் கழிவதனால் அல்லாமல் வேறு வகையில் பதவியிலிருந்து வெளியேறும் சபையொன்றைப் பின்னுறுவதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட சபையொன்றின் விடயத்தில் புதிய சபையின் தேர்தல் அல்லது பெயர் குறித்து நியமனம் பூர்த்தியடைந்த தேதியையடுத்துப் பின்னுறு ஒரு மாதத்திற்குள்ளான ஒரு தேதியாக இருத்தல் வேண்டும்.

(4) ஏதேனும் காரணத்திற்காக (1)ஆம் உட்பிரிவின்கீழ் வெளியிடப்பட்ட அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்ட தேதியன்று கூட்டம் நடைபெறாத விடத்து, உள்ளூராட்சி ஆணையாளர் அதன் பொருட்டு வெளியிடப்பட்ட மேலதிக அறிவித்தலால் அல்லது அறிவித்தல்களால் கூட்டத்தை வேறேதேனும் திகதிக்குக் கூட்டலாம், ஆயினும் அத்தகைய வேறு தேதி (2) ஆம் உட்பிரிவின் கீழ் வெளியிடப்பட்ட அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்ட தேதியை அடுத்து அடுத்துறும் ஒரு மாதத்திற்குட்பட்டதாயிருத்தல் வேண்டும்.

மாநகர முதல்வரையும் பிரதி முதல்வரையும் ஓர் உள்ளூர் அதிகார சபையின் முதலாவது கூட்டத்தில் அல்லது வேறு கூட்டத்தில்

66ஈ. (1) மாநகர முதல்வரொருவர் தேர்ந்தெடுக்கப்படும் வரை 66அ என்னும் பிரிவின் கீழ் கூட்டப்படக்கூடிய முதலாவது கூட்டமும், வேறேதேனும் கூட்டமும் (இப்பிரிவில் “தலைமைதாங்கும் அலுவலர்” எனக் குறிப்பீடுசெய்யப்படும்) உள்ளூராட்சி ஆணையாளரினால் தலைமைதாங்கப்படுதல் வேண்டும்.

தேர்ந்தெடுப் பதற்கான நடவடிக்கை முறை.

(2) சபையின் உறுப்பினர்கள், அதன் முதலாவது கூட்டத்தில், சபையின் மாநகர முதல்வராகவிருப் பதற்கென அவர்களின் உறுப்பினர்களுள் ஒருவரைத் தேர்ந்தெடுத்தல் வேண்டும்.

(3) இரண்டாம் உட்பிரிவின்கீழ் சபையின் மாநகர முதல்வரைத் தேர்ந்தெடுத்தலானது, சபையின் உறுப்பாண்மையில் அரைவாசிக்குக் குறையாதோரைக் கொண்டுள்ள ஒரு கூட்ட நடப்பெண் அத்தகைய கூட்டத்தில் சமுகமளித்திருந்தாலொழிய, இடம்பெறுதலாகாது.

(4) சபையின் எவரேனும் உறுப்பினர், அவரது சம்மதத்துடன், கூட்டத்தில் சமுகமளித்துள்ள வேறெவரேனும் உறுப்பினரினால் மாநகர முதல்வராகத் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு முன்மொழியப்படலாம் அத்துடன் வழிமொழியப்படலாம்.

(5) மாநகர முதல்வராகத் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு ஒரு உறுப்பினரின் பெயர்மட்டுமே முன்மொழியப்படுமிடத்து, தேர்தலானது எக்கூட்டத்தில் இடம்பெறுகின்றதோ அக்கூட்டத்தில் தலைமைதாங்கும் அலுவலர், உறுப்பினரை மாநகர முதல்வராகத் தேர்ந்தெடுக்கப்பட்டவராக வெளிப்படுத்துதல் வேண்டும்.

(6) மாநகர முதல்வராகத் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட உறுப்பினர்களின் பெயர்கள் முன்மொழியப்பட்டு வழிமொழியப்படுமிடத்து தேர்தல் முறையானது, பகிரங்க வாக்களித்தல்மூலமானதாகவிருத்தல் வேண்டுமென தலைமைதாங்கும் அலுவலர் சமுகமளித்துள்ள ஒவ்வோர் உறுப்பினரினதும் பெயரைக் கூப்பிட்டு, அவர் எவ்வாறு வாக்களிக்க விரும்புகின்றாரென அவரிடம் கேட்டு, அதற்கிணங்க வாக்குகளைப் பதிவதன்மூலம் பெறுதல் வேண்டும். உறுப்பினரொருவர் வாக்களிக்காது விடலாம் அத்துடன் அத்தகையவொரு விடயத்தில் தலைமைதாங்கும் அலுவலர் அத்தகைய உறுப்பினர் வாக்களிக்காது தவிர்த்தமை பற்றிய நிகழ்வைப் பதிதல் வேண்டும்.

(7) மாநகர முதல்வரொருவரைத் தேர்ந்தெடுப்பதற்கான நடவடிக்கைகளின் முடிவில், தலைமை தாங்கும் அலுவலர் வாக்களிப்பின் முடிவை வெளிப்படுத்துதல் வேண்டும்.

உறுப்பினரெவரும் தேவைப்பட்ட எண்ணிக்கையினவான வாக்குகளைப் பெறாதவிடத்து.

66உ. (1) மாநகர முதல்வராகத் தேர்ந்தெடுக்கப்படுவதற்காக இரண்டுக்கு மேற்பட்ட உறுப்பினர்களின் பெயர்கள் முன்மொழியப்பட்டு வழிமொழியப்படுமிடத்தும், தனியொரு உறுப்பினர் எவரும், முதலாவது வாக்களிப்பில், எஞ்சியுள்ள உறுப்பினர்களினாற் பெறப்பட்ட வாக்குகளின் கூட்டுமொத்தத்திலும் பார்க்கக் கூடுதலான வாக்குகளைப் பெறாதவிடத்தும், இதனகத்துப் பின்னர் ஏற்பாடு செய்யப்பட்டவாறு ஒரு உறுப்பினர் தேர்தலிலிருந்து தவிர்க்கப்படுதல் வேண்டுமெனபதுடன், விடயத்துக்கேற்ப, வாக்களிப்பொன்றில் உறுப்பினர்களினாற் பெறப்பட்ட வாக்குகளின் கூட்டுமொத்தத்தைப் பார்க்கிலும் கூடுதலான வாக்குகளைப் பெறும்வரை, அல்லது இருஉறுப்பினர்கள் தொடர்பில் மட்டுமே வாக்களிப்பு நடாத்தப்பட்டு பூர்த்திசெய்யப்படும்வரை, அடுத்துப் பின்னரான ஒவ்வொரு வாக்களிப்பின் பின்னரும் ஒரு உறுப்பினர் தேர்தலிலிருந்து தவிர்க்கப்பட்டு, வாக்களிப்பு அதேமுறையில் தொடர்ந்து நடாத்தப்படுதலும் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்டவாறு உறுப்பினரொருவர் தேர்தலிலிருந்து தவிர்க்கப்படக்கூடிய முறை பின்வருமாறு நிறைவேற்றப்படுதல் வேண்டும்:-

(அ) ஒரு உறுப்பினரினால் பெறப்பட்ட வாக்குகளின் எண்ணிக்கை எஞ்சியுள்ள உறுப்பினர்களுள் ஒவ்வொருவரினாலும் பெறப்பட்ட வாக்குகளின் எண்ணிக்கையிலும் பார்க்கக் குறைவாகவிருந்தால், ஆகக் குறைந்த எண்ணிக்கையைப் பெறுகின்ற உறுப்பினர் தவிர்க்கப்படுதல் வேண்டும்; அத்துடன்

(ஆ) எல்லா உறுப்பினர்களுள் ஒவ்வொருவரும் சம எண்ணிக்கையினவான வாக்குகளைப் பெற்றால், அல்லது இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட உறுப்பினர்களுள் ஒவ்வொருவரும் எஞ்சியுள்ள உறுப்பினரினால் அல்லது உறுப்பினர்களுள் ஒவ்வொருவரினாலும் பெறப்பட்ட வாக்குகளிலும் பார்க்கக் குறைவாகவுள்ள சம எண்ணிக்கையினவான வாக்குகளைப் பெற்றால் சம எண்ணிக்கையினவான வாக்குகளைப் பெறுகின்ற உறுப்பினர்களுள் ஒருவர் தவிர்க்கப்படுதல் வேண்டுமென்பதுடன் உறுப்பினர்களுள் எவர் தவிர்க்கப்பட வேண்டுமென்பது பற்றிய தீர்மானம், தலைமைதாங்கும் அலுவலர் தீர்மானிக்க வேண்டியவாறான அத்தகைய முறையில், அவரின் முன்னிலையில் இழுக்கப்பட வேண்டிய திருவுளச் சீட்டின்மூலம் செய்யப்படுதலும் வேண்டும்.

(3) ஏதேனும் வாக்களிப்பில் இரு உறுப்பினர்கள் இருக்குமிடத்தும், அளிக்கப்பட்ட வாக்குகளின் எண்ணிக்கை சமமாகப் பிரிக்கப்படுமிடத்தும், ஒரு வாக்கைச் சேர்த்தலானது உறுப்பினருக்குள் ஒருவர் மாநகர முதல்வராகத் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு அவருக்கு உரித்தளிக்குமிடத்தும், மேலதிக வாக்கு எந்த உறுப்பினருக்குக் கொடுக்கப்பட்டுள்ளதாகக் கருதப்படவேண்டுமோ, அந்த உறுப்பினர்பற்றிய தீர்மானம், தலைமைதாங்கும் அலுவலர் தீர்மானிக்கவேண்டியவாறான அத்தகைய முறையில், அவரின் முன்னிலையில் இழுக்கப்படும் திருவுளச்சீட்டின் மூலம் செய்யப்படுதல் வேண்டும்.

பிரதி மாநகர முதல்வரைத் தேர்ந்தெடுத்தல்.

66ஊ. (1) ஓர் உள்ளூர் அதிகார சபையின் முதலாவது பிரதி மாநகர முதல்வர், புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட மாநகர முதல்வரினால் தலைமைதாங்கப்பட்டதும், 66அ என்னும் பிரிவின் கீழ் நடாத்தப்பட்டதுமான சபையின் முதலாவது கூட்டத்தில் தேர்ந்தெடுக்கப்படுதல் வேண்டும்.

(2) பிரிவுகள் 66இ மற்றும் 66ஈ என்பவற்றின் ஏற்பாடுகள், அப்பிரிவில் மாநகர முதல்வர் பற்றிய ஒவ்வொரு குறிப்பீடும் பிரதி மாநகர முதல்வருக்கான குறிப்பீடு என்றாற்போன்று அதே முறையில் பிரதி மாநகர முதல்வரொருவரைத் தேர்ந்தெடுப்பதற்கு ஏற்புடையனவாதல் வேண்டும்.

*மாநகர முதல்வர் அல்லது பிரதி மாநகர முதல்வர் பதவியிலான வெற்றிடம்.*

66எ. சபையொன்றின் பதவிக்காலத்தின்போது அத்தகைய சபையின் மாநகர முதல்வரின் அல்லது பிரதி மாநகர முதல்வரின் பதவி வறிதாகவரும் போதெல்லாம், உள்ளூராட்சி ஆணையாளர், அத்தகைய வெற்றிடம் பற்றிய அறிவித்தலைச் சபையிடமிருந்து பெற்றதிலிருந்து இரு வாரங்களினுள்ளும், 66இ என்னும் பிரிவின் (1)ஆம் அல்லது (4)ஆம் உட்பிரிவுகளின் ஏற்பாடுகளுக்கிணங்கச் சேர்ப்பிக்கப்பட்ட அறிவித்தல் மூலம் அல்லது அறிவித்தல்கள் மூலம் விடயத்துக்கேற்ப, புதிய மாநகர முதல்வரொருவரை அல்லது பிரதி மாநகர முதல்வரொருவரைத் தேர்ந்தெடுப்பதற்காகக் கூட்டமொன்றைக் கூட்டுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய அறிவித்தலில் அல்லது அறிவித்தல்களில் கூட்டத்துக்காகக் குறித்துரைக்கப்பட்ட தேதி, இவ்வெற்றிடம் ஏற்பட்டதன் அடுத்து அடுத்துறும் ஆறு வாரங்களினுள் விடயத்துக்கேற்ப, புதிய மாநகர முதல்வரொருவர் அல்லது பிரதி மாநகர முதல்வரொருவர் தேர்ந்தெடுக்கப்படுவதனை உறுதிப்படுத்துகின்றவாறான அத்தகையதாக இருத்தலும் வேண்டும்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 67ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**49**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 67ஆம் பிரிவு, அப்பிரிவின் (2)ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது:-

"(2) தெரிவத்தாட்சி அலுவலர், தேர்தற் பிரதேசம் எந்த மாவட்டத்தில் அமைந்துள்ளதோ அந்த மாவட்டத்தின் தேர்தல்கள் அலுவலருக்கு, எல்லா வாக்குச்சீட்டுகளையும், ஒவ்வொரு வேட்பாளருக்கும் அளிக்கப்பட்ட வாக்குகளின் எண்ணிக்கை பற்றிய கூற்றொன்றையும், வாக்குச்சீட்டுக்

கணக்கையம், அளிக்கப்பட்ட வாக்குகள் நிரலையும், அடியிதழ்களின் பொதிகளையும் மற்றும் 64ஆம் பிரிவின் கீழ் வாக்கெண்ணும் அலுவர்களினால் அனுப்பப்பட்ட தேருநர் நிரல்களின் அடையாளமிடப்பட்ட பிரதிகளையும் அனுப்பிவைத்தல் வேண்டும்; ஒவ்வொரு பொதியிலும் அதன் உள்ளீடுகள் பற்றிய விவரணத்தையும், அவை எத் தேர்தல் தொடர்பானவையோ அத்தேர்தலின் தேதியையும், மற்றும் தேர்தலானது எவ்வாட்டாரங்களில் நடாத்தப் பட்டதோ அவ்வட்டாரங்களின் பெயர்களையும் அவர் புறக்குறிப்பிடுதல் வேண்டும்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 68ஆம் பிரிவை நீக்கி விடுதல்.*

**50.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 68ஆம் பிரிவு இத்தால் நீக்கப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 69அ என்னும் பிரிவை நீக்கி விடுதல்.*

**51.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 69அ என்னும் பிரிவு இத்தால் நீக்கப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தில் 72அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.*

**52.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 72ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் பதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுகின்றதுடன், இது அச் சட்டவாக்கத்தின் 72அ என்னும் பிரிவாகப் பயனுடைய தாதலும் வேண்டும்:-

"*வாக்கெடுப்பு நிலையங்களிலான குழப்பங்கள்.*

72அ. (1) அத்தகைய தன்மையினவான குறித்த சில நிகழ்வுகள் ஏற்படுவதன் விளைவாக-

(அ) வாக்கெடுப்புத் தொடங்குவதற்கு நிர்ணயிக்கப்பட்ட நேரத்தில் வாக்கெடுப்பு நிலையமொன்றில் வாக்கெடுப்பைத் தொடங்குவதற்கு இயலாதுள்ளவிடத்து;

(ஆ) அத்தகைய வாக்கெடுப்பு நிலையத்திலான வாக்கெடுப்பு, வாக்கெடுப்பு ஆரம்பிக்கப்படுவதற்கு நிர்ணயிக்கப்பட்ட நேரத்தில் தொடங்கி, ஆனால் வாக்

கெடுப்பு முடிவடைவதற்கு நிர்ணயிக்கப்பட்ட நேரம்வரை தொடர்ந்து நடாத்தப்பட முடியாததாகவிருக்குமிடத்து;

(இ) தலைமைதாங்கும் அலுவலரின் கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்ட ஏதேனும் காரணத்துக்காக, அவ்வாக்கெடுப்பு நிலையத்தில் வாக்கெடுப்பை நடாத்த முடியாதுள்ளவிடத்து;

(ஈ) ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட வாக்கெடுப்பு முகவர்கள், வாக்கெடுப்பின் போதான ஒரு குழப்பத்தின்போது அச்சுறுத்தப்படுமிடத்து, கொல்லப்படுமிடத்து அல்லது வாக்கெடுப்பு நிலையத்திலிருந்து துரப்படுமிடத்து;

(உ) வாக்கெடுப்புப் பணியாட்டொகுதியினர், வழியில் எவையேனும் முட்டுக்கட்டைகள் காரணமாக, வாக்கெடுப்பு நிலையத்தை வந்தடைய இயலாதுள்ளவிடத்து;

(ஊ) வாக்கெடுப்பு நிலையத்திலான ஏதேனும் சமாதானக் குழப்பம் அத்தகைய வாக்கெடுப்பு நிலையத்தில் வாக்கெடுப்பை நடாத்துவதனை இயலாததாக்குமிடத்து;

(எ) வாக்குச்சீட்டுகளைக் களவாகத் திணித்தலானது எவரேனுமாளினால் வலோத்காரமாக நிறைவேற்றப்படுமிடத்து; அல்லது

(ஏ) ஏதேனும் வாக்கெடுப்பு நிலையத்தில் உண்மையான, சுதந்திரமான, நியாயமான மற்றும் இரகசியமான வாக்கெடுப்பு இல்லாதவிடத்து,

அவ்வாக் கெடுப்பு நிலையத்தின் தலைமைதாங்கும் அலுவலர், அத்தகைய நிகழ்வு பற்றித் தெரிவத்தாட்சி அலுவலருக்கு உடனடுத்து அறிவித்தல் வேண்டுமென்பதுடன் அவர் அந்நிகழ்வை ஆணையாளருக்கு அறிவித்தலும் வேண்டும்.

(2) ஆணையாளர், (2)ஆம் உட்பிரிவின்கீழ் ஏதேனும் தகவலைப் பெற்றதன்மீதும், பெறப்பட்ட அத்தகைய தகவலின் செம்மையை நிச்சயிப்பதற்கு அவசியமென அவர் கருதக்கூடியவாறான அத்தகைய விசாரணைகளைச் செய்தபின்னரும், வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளைமூலம், அத்தகைய வாக்கெடுப்பு நிலையத்தில் நடாத்தப் பட்ட வாக்கெடுப்பு வறிதானதென வெளிப்படுத்த லாம்.".

*முதன்மைச் சட்டவாக்கத் தின் 73ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.*

**53.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 73ஆம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படு கின்றது:-

*"வேட்பாளர் அவரது சொந்த வாக்கெடுப்பு முகவராக அல்லது வாக் கெண்ணும் முகவராகச் செயலாற்றலாம் அல்லது அத்தகைய முகவருக்கு உதவியளிக்க லாம்.*

73. இக்கட்டளைச் சட்டத்தின்கீழான ஏதேனும் தேர்தலில் தேர்ந்தெடுக்கப்படுவதற்கான வேட் பாளரொருவர், அவரது வாக்கெடுப்பு முகவர் அல்லது வாக்கெண்ணும் முகவர் ஒருவர் நியமிக்கப்பட்டிருப்பின், அவர் எந்தச் செயலை அல்லது காரியத்தைச் செய்வதற்குத் தேவைப் படுத்தப்பட்டிருக்கக்கூடுமோ அல்லது அதிகார மளிக்கப்பட்டிருக்கக்கூடுமோ அந்த ஏதேனும் செயலை அல்லது காரியத்தைத் தானே செய்யலாம் அல்லது அத்தகைய ஏதேனும் செயலை அல்லது காரியத்தைச் செய்வதில் அத்தகைய முகவருக்கு உதவியளிக்கலாம். எவ்வாறாயினும், இப்பிரிவின் கீழ் செயலாற்று முன்னர், அவ்வேட்பாளர், அத்தகையவொரு முகவரினால் செய்யப்படுவதற் குத் தேவைப்படுத்தப்பட்ட வெளிப்படுத்துகையைச் செய்தல் வேண்டும்.".

*முதன்மைச் சட்டவாக் கத்தின் 74ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.*

**54.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 74ஆம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படு கின்றது:-

*"வேட்பாளர் களின் முகவர்கள் வருகை தராமை.*

74. இக்கட்டளைச் சட்டத்தின்கீழான ஏதேனும் தேர்தலில் இக்கட்டளைச் சட்டத்தின் கீழான ஏதே னும் செயல் அல்லது காரியம், வேட்பாளரின் எவரேனும் முகவரின் அல்லது முகவர்களின் முன்னிலையில் செய்யப்படுவதற்குத் தேவைப்படுத்

தப்படுமிடத்து அல்லது அதிகாரமளிக்கப்படுமிடத்து, அந்நோக்கத்துக்காக நியமிக்கப்பட்ட நேரத்திலும் இடத்திலும் அத்தகைய எவரேனும் முகவர் அல்லது முகவர்கள் வருகை தராமையானது, அத்தகைய செயல் அல்லது காரியம் வேறுவகையில் முறையாகச் செய்யப்படின், செய்யப்பட்ட செயலை அல்லது காரியத்தைச் செல்லுபடியற்ற தாக்குதலாகாது.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 75ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.*

**55.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 75ஆம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது:-

*"வாக்கு வெளிக்காட்டப்படுவதனைத் தடை செய்தல்.*

**75.** இக்கட்டளைச் சட்டத்தின்கீழான ஏதேனும் தேர்தலில் வாக்களித்துள்ள எவரேனுமாள், அத்தகைய தேர்தலைக் கேள்விக்குட்படுத்துவதற்குத் தொடுக்கப்பட்ட ஏதேனும் சட்ட வழக்கு நடவடிக்கையில், அவர் எவருக்கு வாக்களித்தாரென்பதைக் கூறுவதற்குத் தேவைப்படுத்தப்படுதலாகாது.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 75அ என்னும் பிரிவைத் திருத்துதல்.*

**56.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 75அ என்னும் பிரிவு அப்பிரிவின் (அ) என்னும் பந்தியில் "ஆகக்கூடுதலான எண்ணிக்கையினதான விருப்புத் தெரிவுகள்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "ஆகக்கூடுதலான எண்ணிக்கையினதான வாக்குகள்" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:-

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 76அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.*

**57.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 76ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுகின்றதுடன், இது அச்சட்டவாக்கத்தின் 76அ என்னும் பிரிவாகப் பயனுடையதாதலும் வேண்டும்:-

*"ஆணையாளர் பணிப்புகளை வழங்குதல்.*

**76அ.** இக்கட்டளைச் சட்டத்தின் கீழான தேர்தலொன்றை நடாத்துவதில் ஏதேனும் கஷ்டம் எழுமாயின், ஆணையாளர், வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளைமூலம், எவையேனும் விசேட அல்லது எதிர்பாராச் சூழ்நிலைகளுக்காக ஏற்பாடுசெய்யும் நோக்குடன் அல்லது எந்தக் கேள்வியை அல்லது கருமத்தைத் தீர்மானிப்பதற்

காக அல்லது சீர்படுத்துவதற்காக இக்கட்டளைச் சட்டத்தினால் ஏற்பாடெதுவும் அல்லது பயனுள்ள ஏற்பாடெதுவும் செய்யப்படவில்லையோ அந்த ஏதேனும் கேள்வியை அல்லது கருமத்தைத் தீர்மானிப்பதற்கு அல்லது சீர்படுத்துவதற்கு அவசியமென அவர் கருதக்கூடியவாறான அத்த கைய எல்லாப் பணிப்புகளையும் வழங்கலாம்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 78ஆம் பிரிவைத் திருத்துதல்.

**58.** ஆயிரத்துத்தொளாயிரத்துத் தொண்ணூறாம் ஆண்டின் 25ஆம் இலக்கச் சட்டத்தினால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 78ஆம் பிரிவு, அப்பிரிவின் (1) உட்பிரிவில் இத்தாற் பின்வருமாறு மேலும் திருத்தப்படுகின்றது:-

(1) அவ்வுட்பிரிவின் (அ) என்னும் பந்தியில், "உதவித் தெரிவத்தாட்சி அலுவலரொருவரிடம் ஒப்படைக்கின்றவரான" என்னும் சொற்களுக்குப் பதிலாக "26ஆம் பிரிவின் (1)ஆம் உட்பிரிவின்கீழ் வழங்கப்பட்ட அறிவித்தலில் எந்த உதவித் தெரிவத்தாட்சி அலுவலரின் பெயர் குறித்துரைக்கப்படுகின்றதோ அந்த உதவித் தெரிவத்தாட்சி அலுவலரிடம் ஒப்படைக் கின்றவரான" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்; அத்துடன்

(2) அப்பிரிவின் (அஅ) என்னும் பந்தியை நீக்கிவிடுவதன் மூலமும்,

முதன்மைச் சட்டவாக்கத்தின் 81அ என்னும் பிரிவைத் திருத்துதல்.

**59.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 81அ என்னும் பிரிவு அப்பிரிவின் (1)ஆம் உட்பிரிவின் (இ) என்னும் பந்தியை நிக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன்மூலமும் இத்தால் திருத்தப்படுகின்றது.

"(இ) ஏதேனும் குறிப்பிட்டவொரு அரசியற்கட்சியின் அல்லது சுயேச்சைக் குழுவின் எவரேனும் வேட்பாளருக்கு வாக்களிக்காதுவிடும்படி எவரேனும் வாக்காளரை வற்புறுத்துதல் ;".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 81ஆ என்னும் பிரிவைத் திருத்துதல்.

**60**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 81ஆ என்னும் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அப்பிரிவின் (1)ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவை இடுவதன்மூலமும்:-

"(1அ) இக்கட்டளைச் சட்டத்தின் கீழான ஏதேனும் தேர்தலுக்கான நியமன காலப்பகுதியின் முதலாவது நாளன்று தொடங்குகின்றதும், அத்தகைய தேர்தலிலான வாக்கெடுப்பு எந்நாளன்று நடைபெறுகின்றதோ அந்நாளை அடுத்துவரும் நாளன்று முடிவடைகின்றதுமான காலப்பகுதியின்போது,-

(அ) அமைச்சரெவரும், பிரதியமைச்சரெவரும், பாராளுமன்ற உறுப்பினரெவரும், ஏதேனும் மாகாண சபையின் அமைச்சர்கள் சபையின் அமைச்சரெவரும் அல்லது மாகாண சபையொன்றின் உறுப்பினரெவரும் அல்லது வேறு அதிகாரியெவரும்-

(அ) அதிகாரத்திலுள்ள அரசியற் கட்சியிலிருந்து போட்டியிடுகின்ற குறிப்பிட்ட எவரேனும் வேட்பாளருக்குச் சாதகமாக வாக்களிப்பதற்கு வாக்காளர்கள்மீது செல்வாக்குச் செலுத்துகின்ற பயனைக் கொண்டிருக்கக்கூடியவையும், ஏதேனும் அரசாங்க நிறுவனத்தில் அல்லது ஏதேனும் பகிரங்கப் பொறுப்பு முயற்சியில் ஆனவையுமான எவையேனும் நியமித்த நியமனங்களைச் செய்தலாகாது; அத்துடன்

(ஆ) அமைச்சரெவரும் அல்லது ஏதேனும் மாகாணசபையின் அமைச்சர்கள் சபையின் அமைச்சரெவரும், வாக்கெடுப்பின்போது அல்லது வாக்குகளை எண்ணும்போது, அவரது வாக்கை அளிக்கும் நோக்கத்திற்குத் தவிர ஏதேனும் வாக்கெடுப்பு நிலையத்தினுள் பிரவேசித்தலாகாது.";

(2) அப்பிரிவின் (2)ஆம் உட்பிரிவில், "ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகளுள்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "ஓராம் அல்லது (1அ) என்னும் உட்பிரிவுகளின் ஏற்பாடுகளுள்" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்; அத்துடன்

(3) அப்பிரிவின் (5)ஆம் உட்பிரிவில், "(1)ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளின்" என்னும் சொற்களுக்கும் எண்ணுக்கும் பதிலாக, "(1)ஆம் உட்பிரிவின் அல்லது (1அ) என்னும் உட்பிரிவின் ஏற்பாடுகளின்" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 82ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**61.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 82ஆம் பிரிவில், "ஒரே தேர்தற் பிரதேசத்திலாயினுஞ்சரி" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "ஒரே வட்டாரத்திலாயினுஞ்சரி, ஒரே தேர்தற் பிரதேசத்திலாயினுஞ்சரி" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 82இ என்னும் பிரிவைத் திருத்துதல்.*

**62.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 82இ என்னும் பிரிவு, அப்பிரிவின் (2)ஆம், (3)ஆம், (4)ஆம் உட்பிரிவுகளில், "அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சி எதற்கும் அல்லது சுயேச்சைக் குழு எதற்கும்" என்னும் சொற்களும், "அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சி எதனதும் அல்லது சுயேச்சைக் குழு எதனதும்" என்னும் சொற்களும், "ஏதேனும் அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சிக்கு அல்லது சுயேச்சைக் குழுவுக்கு" என்னும் சொற்களும் அவ்வுட்பிரிவுகளில் தோன்றுமிடங்களில் எல்லாம் அவற்றுக்குப் பதிலாக, "வேட்பாளர் எவருக்கும்", "வேட்பாளர் எவரினதும்" மற்றும் "எவரேனும் வேட்பாளருக்கு" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 82ஈ ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**63.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 82ஈ என்னும் பிரிவு, அப்பிரிவின் (ஏ) என்னும் பந்தியில், "ஏதேனும் அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சிக்கு அல்லது சுயேச்சைக் குழுவுக்கு" என்னும் சொற்களும், அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியினால் அல்லது சுயேச்சைக் குழுவினால்" என்னும் சொற்களும் அப்பந்தியில் தோன்றுமிடங்களில் எல்லாம் அவற்றுக்குப் பதிலாக, "எவரேனும் வேட்பாளருக்கு" மற்றும் "எவரேனும் வேட்பாளரினால்" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது.

**64**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 82ச என்னும் பிரிவு, அப்பிரிவின் (1)ஆம் உட்பிரிவில் இத்தாற் பின்வருமாறு திருத்தப் படுகின்றது:- *முதன்மைச் சட்டவாக்கத் தின் 82ச என்னும் பிரிவைத் திருத்துதல்.*

(1) "ஏதேனும் தேர்தல் இடப்பரப்பு தொடர்பான" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "ஏதேனும் தேர்தற் பிரதேசத் தின் ஏதேனும் வட்டாரம் தொடர்பான" என்னும் சொற்களை இடுவதன்மூலமும்;

(2) அவ்வுட்பிரிவின் (அ) என்னும் பந்தியில், "அவர்கள் விரும்பி அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சிக்கு அல்லது சுயேச்சைக் குழுவிற்கு" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "அது ஏதேனும் அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியின் அல்லது சுயேச்சைக் குழுவின் எந்த வேட் பாளருக்கு விருப்புத் தெரிவித்ததோ அந்த வேட் பாளருக்கு" என்னும் சொற்களை இடுவதன்மூலமும்.

**65**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 82ஞ என்னும் பிரிவில், "ஏதேனும் தேர்தல் இடப்பரப்பில் தேர்தலொன்று தொடர்பிலான தாக இருக்குமிடத்து," என்னும் சொற்களுக்குப் பதிலாக, "தேர்தற் பிரதேசமொன்றின் ஏதேனும் வட்டாரத்துக்கான தேர்தலொன்று தொடர்பானதாகவிருக்குமிடத்து," என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தாற் திருத்தப்படுகின்றது. *முதன்மைச் சட்டவாக்கத் தின் 82ஞ என்னும் பிரிவைத் திருத்துதல்.*

**66**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 82ட என்னும் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:- *முதன்மைச் சட்டவாக்கத் தின் 82ட என்னும் பிரிவைத் திருத்துதல்.*

(1) அப்பிரிவின் (அ) என்னும் பந்தியில், "அத்தகைய தேர்தலில் தெரிந்தனுப்பப்படுவதற்கு அல்லது தேர்ந் தெடுக்கப்படுவதற்கு" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "அத்தகைய தேர்தலில் ஏதேனும் வட்டாரத்துக்காகத் தெரிந்தனுப்பப்படுவதற்கு அல்லது தேர்ந்தெடுக்கப்படு வதற்கு" என்னும் சொற்களை இடுவதன்மூலமும்; அத்துடன்

(2) அப்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில், "அத்தகைய தேர்தலில் தாம் வேட்பாளராகவிருந்ததாக" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "அத்தகைய தேர்தலில் தாம் ஏதேனும் வட்டாரத்துக்கான வேட்பாளராகவிருந்த தாக" என்னும் சொற்களை இடுவதன்மூலமும்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 82ண என்னும் பிரிவைத் திருத்துதல்.

**67.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 82ண என்னும் பிரிவு, அப்பிரிவின் (அ) என்னும் பந்தியில் "ஏதேனும் தேர்தல் இடப்பரப்பு தொடர்பான" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "ஏதேனும் தேர்தற் பிரதேசத்தின் ஏதேனும் வட்டாரம் தொடர்பிலான" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தாற் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 82ந என்னும் பிரிவைத் திருத்துதல்.

**68.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 82ந என்னும் பிரிவு, அப்பிரிவின் (உ) என்னும் பந்தியில் "ஏதேனும் தேர்தல் இடப்பரப்பு தொடர்பான" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "ஏதேனும் தேர்தற் பிரதேசத்தின் ஏதேனும் வட்டாரம் தொடர்பிலான" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தாற் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 82ற என்னும் பிரிவைத் திருத்துதல்.

**69.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 82ற என்னும் பிரிவு, அப்பிரிவின் (இ) என்னும் பந்தியில் "ஏதேனும் தேர்தல் இடப்பரப்பு தொடர்பான தேர்தல் வறிதானதென வெளிப்படுத்தப்பட வேண்டிய" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "ஏதேனும் தேர்தற் பிரதேசத்தின் ஏதேனும் வட்டாரம் தொடர்பிலான தேர்தல் வறிதானதென வெளிப்படுத்தப்படவேண்டிய" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தாற் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 82ஙா என்னும் பிரிவைத் திருத்துதல்.

**70.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 82ஙா என்னும் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது:-

"வெளியிடுவதற்கெதிரான தடை.

82ஙா. தேர்தலொன்றில் வாக்களித்துள்ள தேருநரெவரும், அத்தகைய தேர்தலைக் கேள்விக்குட்படுத்துவதற்கான ஏதேனும் வழக்கு நடவடிக்கையில் அவர் எந்த வேட்பாளருக்கு வாக்களித்துள்ளாரெனக் கூறுவதற்குத் தேவைப்படுத்தப்படுதலாகாது.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 84ஆம் பிரிவைத் திருத்துதல்.

**71.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 84ஆம் பிரிவு, "ஏதேனும் தேர்தற் பிரதேசத்தின் தேருநர் நிரல்களில்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "ஏதேனும் தேர்தற் பிரதேசத்தின் ஒவ்வொரு வட்டாரத்துக்குமான தேருநர் நிரலில்" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 86ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.

**72.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 86ஆம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது:-

"தேர்தல்களுக்கான செலவுகள்.

86. ஏதேனும் உள்ளூர் அதிகாரசபையின் ஏதேனும் தேர்தலின் நோக்கத்துக்காக வேட்பாளர்களைப் பெயர்குறித்து நியமித்தல் சம்பந்தமாகவும், ஒரு பொதுத் தேர்தலை நடாத்துவதிலும், ஏதேனும் தேர்தற் பிரதேசத்தின் ஒவ்வொரு வட்டாரத்தினதும் தேருநர் நிரலைத் தயாரிப்பதில் இக்கட்டளைச் சட்டத்தின்கீழ் உறப்பட்ட எல்லாச் செலவுகளும், திரட்டு நிதியத்திலிருந்து கொடுத்துத் தீர்க்கப்படுதல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 89ஆம் பிரிவைத் திருத்தல்.

**73.** ஆயிரத்துத்தொளாயிரத்துத் தொண்ணூறாம் ஆண்டின் 25ஆம் இலக்கச் சட்டத்தினால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 89ஆம் பிரிவு, இத்தாற் பின்வருமாறு மேலும் திருத்தப்படுகின்றது:-

(1) நியமிக்கப்பட்ட தேதி" என்னும் சொல்லமைப்புக்கான வரைவிலக்கணத்தை உடனடுத்துப் பின்வரும் புதிய வரைவிலக்கணத்தை உட்புகுத்துவதன் மூலமும்:-

"அங்கீகரிக்கப்பட்ட சின்னம்" என்பது, வர்த்தமானியில் வெளியிடப்படும் அறிவிப்பின்மூலம், இக்கட்டளைச் சட்டத்தின் நோக்கங்களுக்காக ஆணையாளரினால் அங்கீகரிக்கப்பட்டவொரு சின்னம் என்று பொருளாகும்.";

(2) "அதிகாரமளிக்கப்பட்ட முகவர்" என்ற பதத்தினது வரைவிலக்கணத்தை நீக்கிவிடுவதன் மூலமும்; அத்துடன்

(3) "தேர்தல்கள் ஆணையாளர்" என்னும் சொல்லமைப்புக்கான வரைவிலக்கணத்தை உடனடுத்துப் பின்வரும் புதிய வரைவிலக்கணத்தை உட்புகுத்துவதன்மூலமும்:-

"சபை" என்பது, விடயத்துக்கேற்ப, ஒரு மாநகர சபை, நகரசபை அல்லது பிரதேச சபை என்று பொருளாகும்;".

முதன்மைச் சட்டவாக்கத்துக்கான முதலாம் அட்டவணையை மாற்றீடு செய்தல்.

**74.** முதன்மைச் சட்டவாக்கத்துக்கான முதலாம் அட்டவணை இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் அட்டவணை இடப்படுகின்றது:-

**"முதலாம் அட்டவணை** [பிரிவு 28(2)]

**நியமனப்பத்திரப் படிவம்**

.............................................................................சபை/பிரதேச சபை அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியொன்றாக/ சுயேச்சை வேட்பாளர்களின் குழுவொன்றாக [இதில் சுயேச்சைக் குழுவொன்றின் விடயத்தில் ........................................குழுத் தலைவராவார்] ......................... மாநகர சபையின்/நகர சபையின்/பிரதேச சபையின் உறுப்பினர்களின் தேர்தலுக்கு வேட்பாளர்களாக இத்தால் பின்வரும் ஆட்களைப் பெயர் குறித்து நியமிக்கின்றது.

**குழு I - வேட்பாளர்கள்**

| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
|---|---|---|---|---|---|---|
| பெயர் | முகவரி | தொழில் | பெண்கள் (பெ) இளைஞர் (இ) | வேட்பாளரின் சம்மதத்தைக் குறிக்கும் கையொப்பம் | வாக்கெடுப்பு மாவட்ட இலக்கமும் வேட்பாளரின் தொடர் இலக்கமும் | வேட்பாளரின் சம்மதத்தைக் குறிக்கும் கையொப்பம் |
| ........ | ........ | ........ | ........ | ........ | ........ | ........ |
| ........ | ........ | ........ | ........ | ........ | ........ | ........ |
| ........ | ........ | ........ | ........ | ........ | ........ | ........ |
| ........ | ........ | ........ | ........ | ........ | ........ | ........ |

**குழு II - மேலதிக ஆட்கள்**

| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
|---|---|---|---|---|---|
| பெயரும் தே.ஆ.அ. இலக்கமும் | முகவரி | வாழ்க்கைத் தொழில் | பெண்கள் (பெ) இளைஞர் (இ) | வாக்கெடுப்பு மாவட்ட இலக்கமும் மேலதிக ஆளின் தொடர் இலக்கமும் | மேலதிக ஆளின் சம்மதத்தைக் குறிக்கும் கையொப்பம் |
| ........ | ........ | ........ | ........ | ........ | ........ |
| ........ | ........ | ........ | ........ | ........ | ........ |
| ........ | ........ | ........ | ........ | ........ | ........ |
| ........ | ........ | ........ | ........ | ........ | ........ |

இந்த நியமனப்பத்திரத்தில் எந்த இளம் வேட்பாளர்களின் பெயர்கள் காணப் படுகின்றனவோ அந்த இளம் வேட்பாளர்கள் அனைவரும் கட்டளைச் சட்டத்தின் 89ஆம் பிரிவில் விதித்துரைக்கப்பட்ட வயதுக்குட்பட்டவர்கள் என இத்தால் நான் அத்தாட்சிப்படுத்துகின்றேன்.

அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியின்
செயலாளரின்/ குழுத் தலைவரின்
கையொப்பம்

பெயர்:...................................................

முகவரி: ................................................

மேலே பெயர் குறிப்பிடப்பட்டவரான, அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியின் செயலாளராகிய/ குழுத் தலைவராகிய ……………………………….. என்பவரால் …………………… ……………. என்னும் இடத்தில் ....... ஆம் ஆண்டு ……………………….. மாதம் ……………………. ஆகிய திகதியாகிய இன்று எனது முன்னிலையில் கையொப்பமிடப்பட்டது.”.

இரண்டு உறுப்பினர்களின் தெரிவின் விடயத்தில் ஒரு நட்சத்திரக் குறியை (*) உட்புகுத்துவதன்மூலமும் மூன்று உறுப்பினர்களின் தெரிவின் விடயத்தில் இரண்டு நட்சத்திரக்குறியை (**) உட்புகுத்துவதன்மூலமும் சுட்டிக்காட்டி இது ஒரு பல்லுறுப்பினர் வட்டாரமா எனக் குறிப்பிடவும்.

**75.** முதன்மைச் சட்டவாக்கத்தின் இரண்டாம் அட்டவணை நீக்கஞ்செய்யப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் அட்டவணை இடப்படுகின்றது:-

*முதன்மைச் சட்டவாக் கத்தின் 2ஆம் அட்டவணையை மாற்றீடு செய்தல்.*

**“இரண்டாம் அட்டவணை** (பிரிவு 45)

**ஒவ்வொரு வாக்கெடுப்பு நிலையத்துக்கும் வெளியே மற்றும் ஒவ்வொரு வாக்கெடுப்பு நிலையத்தினதும் ஒவ்வொரு வாக்களிப்பு அறைக்கும் வெளியே வெளிக்காட்டிவைக்கப்படவேண்டிய, வாக்களிப்பதில் வாக்காள ரொருவரின் வழிகாட்டுகைக்கான பணிப்புகளின் படிவம்**

வாக்காளர் ஒவ்வொருவரும், அவர் விரும்பும் வேட்பாளரொருவருக்கு அளிக்கப்படக்கூடிய ஒரு வாக்கைக் கொண்டிருத்தல் வேண்டும்.

வாக்காளர், வாக்களிப்பு அறைகளுள் ஒன்றினுட்சென்று, விடயத்திற்கேற்ப அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சி அல்லது சுயேச்சைக் குழுவின் சின்னத்துக்கு எதிராக வாக்குச்சீட்டின் வலதுபுறத்தில் (X) என்ற புள்ளடியை இடுவார்.

வாக்குச் சீட்டொன்றின்மூலம் தமது வாக்கையளித்த வாக்காளர், வாக்குச் சீட்டின் பிற்புறத்திலுள்ள அலுவலகமுறையான குறியீட்டைத் தலைமை தாங்கும் அலுவலருக்குக் காட்டும்வகையில் அதனைப் பின்னர் மடித்து அவ்வாக்குச்சீட்டை வாக்குச் சீட்டுப் பெட்டியினுள் இட்டு, உடனடியாக வாக்கெடுப்பு நிலையத்தை விட்டுவெளியேறுவார்.

வாக்காளர், ஒரு வாக்குச் சீட்டைக் கவனயீனமாகப் பழுதாக்கினால், அவர் அதனைத் தலைமைதாங்கும் அலுவலரிடம் திருப்பிக்கொடுக்க முடியும்; அவ்வலுவலர் அத்தகைய கவனயீனம் பற்றித் திருப்திப்படின், அவருக்கு வேறொரு வாக்குச் சீட்டைக் கொடுப்பார்.

வாக்காளர்-

(அ) ஒன்றுக்கு மேற்பட்ட வேட்பாளருக்கு வாக்களித்தால், அல்லது

(ஆ) எந்தக் குறியீட்டின்மூலம் அவரைப் பின்னர் ஆளடையாளங் காணக்கூடுமோ அந்த ஏதேனும் குறியீட்டை வாக்குச்சீட்டில் இட்டால்,

அவரது வாக்குச்சீட்டு வறிதாகும் என்பதுடன், அது எண்ணவும் படமாட்டாது.

வாக்காளரொருவர், வாக்குச்சீட்டொன்றை வாக்கெடுப்பு நிலையத்திற்கு வெளியே எடுத்துச் சென்றால் அல்லது வாக்குச் சீட்டுப்பெட்டியொன்றினுள் இடுவதற்கு அவர் அதிகாரமளிக்கப்படாத, வாக்குச் சீட்டொன்றைத் தவிர்ந்த வேறெதெனையும் அவ்வாக்குச் சீட்டுப் பெட்டியினுள் இட்டால், அவர், நீதிவானொருவர் முன்னரான சுருக்கவிளக்கத்தின்பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மேல், ஐந்நூறு ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது ஆறுமாதங்களை விஞ்சாதவொரு காலத்துக்கு இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப் பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாவார்.".

*முதன்மைச் சட்டவாக்கத்திற்கான மூன்றாம் அட்டவணையை மாற்றீடு செய்தல்.*

**76.** முதன்மைச் சட்டவாக்கத்திற்கான மூன்றாம் அட்டவணை இத்தால் நீக்கஞ்செய்யப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் அட்டவணை இடப்படுகின்றது.

**"மூன்றாம் அட்டவணை** (பிரிவு 47)

**வாக்குச் சீட்டின் முகப்புப் படிவம்**

*அடியிதழ் இல.*

| | |
|---|---|
| கட்சி "அ" | சின்னம் |
| கட்சி "ஆ" | சின்னம் |
| கட்சி "இ" | சின்னம் |
| சுயேச்சைக் "குழு" 1 | சின்னம் |
| சுயேச்சைக் "குழு" 2 | சின்னம் |
| சுயேச்சைக் "குழு" 3 | சின்னம்.". |

*முதன்மைச் சட்டவாக்கத்துக்கான நான்காம் அட்டவணையை மாற்றீடு செய்தல்.*

**77.** முதன்மைச் சட்டவாக்கத்துக்கான நான்காம் அட்டவணை இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் அட்டவைண இடப்படுகின்றது:-

**"நான்காம் அட்டவணை** (பிரிவு 76(1))

**இரகசியம் பேணல்பற்றிய வெளிப்படுத்துகைப் படிவம்**

……………………………………………………………………ஆகிய நான் (பெயர்), ……………………………………………………….. மாநகர சபையின்/ நகர சபையின் /பிரதேச சபையின் தேர்தற் பிரதேசத்துக்கான ……………… ……………ஆம் இலக்க, வட்டாரத்துக்கான இத்தேர்தலில், எனக்கு வாசித்துக்காட்டப்பட்டுள்ள உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 76ஆம் பிரிவினால் தடைசெய்யப்பட்ட எதனையும் செய்யமாட்டேன் என பயபக்தியாக வாக்குறுதியளித்து வெளிப்படுத்துகின்றேன்.

| | |
|---|---|
| …………………………….. | …………………………….. |
| வெளிப்படுத்துகையைச் செய்விக்கும் ஆளின் பெயரும் பதவிப் பெயரும். | வெளிப்படுத்துபவரின் கையொப்பம் |

*குறிப்பு-* வெளிப்படுத்துகையைச் செய்விக்கும் ஆளினால் இப்பிரிவு வெளிப்படுத்துபவருக்கு வாசித்துக்காட்டப்படுதல் வேண்டும்.

**78.** முதன்மைச் சட்டவாக்கத்துக்கான ஏழாம் அட்டவணை இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் அட்டவணை இடப்படுகின்றது:-

*முதன்மைச் சட்டவாக்கத் துக்கான ஏழாம் அட்டவணையை மாற்றீடு செய்தல்.*

**"ஏழாம் அட்டவணை** (பிரிவு 53அ)

**நிரலின் படிவம்**

**வாக்குச்சீட்டுகள் ஒப்படைக்கப்படாத வாக்காளர்கள் பற்றிய நிரல்**

உள்ளூர் அதிகாரசபையின் பெயர் : ..................................................

வட்டார இல. : ..................................................

தேர்தற்றேதி : ..................................................

வாக்கெடுப்பு நிலையம் : ..................................................

| தேருநர் நிரலிலான இல. | வாக்காளரின் பெயர் | வாக்காளரின் முகவரி | வாக்குச் சீட்டை ஒப்படைக்காமைக்கான காரணம் | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | தோதான சோதனையை மறுத்தமை | தோதான குறியீட்டினால் ஏலவே குறியீடு செய்யப்பட்டமை | தோதான குறியீட்டினால் குறியீடு செய்யப் படுவதற்கு மறுக்கின்றமை | செல்லுபடியான ஆளடையாள ஆவணம் இல்லாமை அல்லது ஆளடையாளம் நிலைநாட்டப் படாமை |

**79.** முதன்மைச் சட்டவாக்கத்துக்கான எட்டாம் அட்டவணை இத்தால் நீக்கப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத் துக்கான எட்டாம் அட்டவணையை நீக்கிவிடுதல்.*

**80.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

*ஒவ்வாமையின் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

பொருள் கோடலும் நீக்கமும்.

**81.** (1) முதன்மைச் சட்டவாக்கத்தில், "மாவட்டத்தின் தேர்தல் கள் அலுவலர்" மற்றும் "தேர்தல்கள் அலுவலர்" என்பவற்றுக் கான ஒவ்வொரு குறிப்பீடும், இச்சட்டம் தொடங்கிய பின்னர், இயைபான தேர்தற் பிரதேசம் எம்மாவட்டத்தினுள் அமைந் துள்ளதோ அம்மாவட்டத்துக்காக, முதன்மைச் சட்டவாக்கத்தின் **4**ஆம் பிரிவின் (1)ஆம் உட்பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலருக்கான குறிப்பீடொன்றாக வாசித்துப் பொருள் கொள்ளப்படுதல் வேண்டும்.

(2) ஆயிரத்துத் தொளாயிரத்து எண்பத்தேழாம் ஆண்டின் **24** ஆம் இலக்க, உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் (திருத்தச்) சட்டத்தின் **34** ஆம் பிரிவு இத்தால் நீக்கப்படுகின்றது.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா *1,387 :* (வெளிநாடு) ரூபா *1,849 :* ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. *163*, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்